
268



# ண்ணாவின்

# அண்ணாவின் வாழ்த்து

"சேரமான்"

திராவிட முன்னேற்றக் கழகம்
நாகப்பட்டினம்

முதற் பதிப்பு : மே, 1958.

விலை : 50 காசுகள்

# பதிப்புரை

திராவிடன் வீட்டு வாழ்விலும் சிறக்க வேண்டும், நாட்டு வாழ்விலும் சிறக்க வேண்டும். அதற்கு அறிஞர் அண்ணாவின் பாதை நற்பாதை. அப் பாதை வழி கருத்தோடு நடந்து அறிஞர் அண்ணாவின் வாழ்த்தினைப் பெற்றாக வேண்டும். தி. மு. க. வின் ஒவ்வொரு உறுப்பினரும் செய்ய வேண்டிய தொண்டு மிகப்பல. அதனை நினைவுறுத்தும் நூல் இது. அத்தோடு நாகை தி. மு. க. வின் வளர்ச்சிக்கு உதவும் நூலுமாகும் இது.

செயலாளர்,
திராவிட முன்னேற்றக் கழகம்,
நாகப்பட்டினம்.

“ சேரமான் ”

அண்ணு இல்லம்,
நாகப்பட்டினம்,
27—3—'58.

தம்பி வெளிமானுக்கு.

வணக்கம். நலம்; நலம் விளைக. நேற்று உனதன்புக் கடிதம் கிடைத்தது. அதோடு உன் அண்ணியாருக்கும் ஒரு கடிதம் கிடைத்தது. அஃதும் அன்புக் கடிதமாகவே இருக்கலாமென்று எண்ணுகின்றேன். அந்த இலாகாவிலிருந்து செய்தி இதுவரை வெளிப்படவில்லையாகையால் அக்கடிதம் பற்றி ஒன்றும் அறிந்தேனில்லை. நிற்க ஏறத்தாழ இரண்டாண்டுகட்குப் பிறகு என் கருத்துரையை நாடும் இந்த இரண்டாவது கடிதத்தை எழுதியுள்ளாய். நீ கல்லூரியை முடித்து உடன் நீ கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகட்கு என் கருத்துரையை வேண்டியிருந்தாய். ஆழ்ந்து சிந்தித்து அன்பையும் குழைந்தெடுத்துக் கூட்டி உன வாழ்க்கைக்குரிய நல்லுரைகளாக நான் கண்டவற்றை உன்பால் நீட்டினேன். ஏற்ற நீ போற்றுதற்குரிய முறையில் அவற்றைக் கைக் கொண்டாய். வெற்றி கண்டதன் மூலம் என் கருத்துரையிலும் நன்மை செறிந்திருந்ததை வெளிப்படுத்தினுய். அதற்கென் நன்றி.

அந்த வேண்டுகோட் கடிதத்தை விட இக் கடிதம் எனக்குப் பெரு மகிழ்வைத் தரும் என்பதை நீ எதிர் பார்த்தே இருப்பாய். அல்லது எழுதிய பின்னராவது எண்ணி இருப்பாய். இரண்டுமில்லையாயின் இப்பொழுது

உணர்ந்து கொள்க. முன்னையக் கடிதத்தைக் காட்டி லும் இக் கடிதத்தால் நான் மகிழ்வதற்குக் காரணம், உனது இப் பெருங் கடிதத்தின் பெரும் பகுதி நாட்டுப் பணியை உள்ளடக்கி நிற்பதேயாகும்.

"நம் குடும்பம் பெருங் குடும்பம்; நாம் வணிகத் தொழிலினர்; குடும்பத்தின் உறுப்பினர் ஒவ்வொரு வரும் பொறுப்புணர்ந்து செயலாற்ற வேண்டிய பழம் பெருமை வாய்ந்த குடும்பம்; தலைமைப் பொறுப்பு போக எஞ்சியதை நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும்" என்ற எண்ணம் உன் உள்ளத்தில் கல்லூரியை முடித்த வுடன் எழுந்தமை இக்கால இளைஞர் நிலையை நோக்க வியத்தற்குரியதுதான். அந்த வியப்பை இரட்டிப்பாக் கும் வகையில் பொறுப்புணர்ந்து வணிகத் துறையில் நீ பயனடைந்தாய்; பயன் தந்துள்ளாய். இரண்டாண்டு கட்கு முன்னர் நீ கொண்ட வீட்டுக் கவலை வீட்டுப் பணி யாகத் தொடங்கியது. இன்று உன் உள்ளத்தில் நாட்டுக் கவலை தலை நீட்டியுளது. நாட்டுப் பணிக்கு வழி கேட் டுளாய். இது போன்ற உன்னைத் தம்பியாகப் பெற்ற நான் மகிழாமல் — பூரிக்காமல் இருக்க முடியுமா?

நேற்றையக் கடிதம் உனது உள்ள உணர்ச்சியை மட்டுமல்ல, உறுதியான ஆர்வத்தையும் காட்டிற்று. எல்லாவற்றையும் விட "நான் அண்ணாவின் வாழ்த் தினைப் பெற்றாக வேண்டும். அதற்குரிய முறையில் பணியாற்ற விழைகிறேன். வழிகாட்டுக" என்ற வரிகள் என் கண்களைத் தேன் நிறைந்த மலர்களாக்கி விட்டன. ஆனால் இவ்வரிகளோ உன் அண்ணியின் மூளையைக் குறுக்கு வழியில் வேலை செய்ய வைத்தது. "அறிஞர் அண்ணாவின் தலைமையில் திருமணம் செய்து கொள்ள

வேண்டும் என்பதை உங்கள் தம்பி குறிப்பாக எழுதி யிருக்கலாம்" என்று சடக்கென்று கூறிவிட்டாள். அது மட்டுமா, "பருவ காலத்தில் உரியதைச் செய்ய வேண்டிய பொறுப்பை நீங்கள் மறந்து விட்டீர்கள்" என்று பேச்சிலே ஏறியும் விட்டாள். பெண்ணல்லவா! அதிலும் குடும்பமறிந்தவள். அந்த அன்பெண்ணம் உண்மையாயினும் இந்த வரிகளில் அக்கருத்தில்லை என்பதை விளக்கவில்லை நான். அண்ணாவின் வாழ்த்தென்றால், என் வாழ்த்தைத்தான் நீ பெற எழுதியுள்ளாய் என்ற சாதாரண அறிவை அவள் வெளிப்படுத்தாமல் இருந்தாளே என்று மகிழ்ந்தேன்.

"நான் அண்ணாவின் வாழ்த்தினைப் பெற்றாக வேண்டும்" என்றெழுதிய உன்னைப் பாராட்டும் நான் "நீ அண்ணாவின் வாழ்த்தினைப் பெற்றாக வேண்டும்" என்பதையும் அறிவித்துக் கொள்கிறேன். நீ அண்ணாவின் வாழ்த்தினைப் பெறும் தகுதியுடையவன் என்ற மாறா நம்பிக்கை எனக்குண்டு. மேலும் அண்ணாவின் வாழ்த்தினைப் பெற ஆயிரமாயிரம் இளைஞர் முன்வர வேண்டும் என்ற எண்ணத்தை முன்னரே உனக்கு எழுதியுள்ளேன். இப்பொழுதும் குறிக்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள பல்லாயிரம் இளைஞர்களும் அவ்வெண்ணத்தைக் கொள்தல் வேண்டுமென்று. அதற்கு நீ ஒரு வழிகாட்டியாய் அமைய வேண்டுமென்பது என் நீங்காப் பேரவா.

அறிஞர் அண்ணா அவர்களின் வாழ்த்துக்கு வழி கேட்கிறாய். நான் எளிய பாதையை உனக்குக் காட்டி விட முடியும். அந்த அறிவின் பேருரு – அறிஞர் அண்ணா – அவரை வேற்றாளாய் எண்ணிக் கொண்

டிருக்கும் மாற்றாருக்குக் கூரிய ஈட்டி முனையாகக் காட்சி யளிக்கும்—காட்சியளிப்பார். ஆனால் தன் தம்பியர்க்கோ — இயக்க அரவணைப்பிலுள்ளோர்க்கோ அன்பூற்றின் குற்றாலமாய்த் தோன்றுவார். மதஞ் செருக்கி மத்தக முயர்த்தி நிற்கும் களிறு பகைப்புலத்திலே கதஞ்செருக்கி நிற்கும். கண்டோர் கதறுவர்; காணாதோரும் கலங்குவர். ஆனால் அதே மதமோ நீர்த் துறையில் நீராடுங்கால் ஊரிலே உள்ள "வாண்டுப் பயல்களாலும்" ஏறி மிதிக்கப்படும். சிந்தை கலங்கச் செய்த தந்தங்களைப் பிடித்துத் தொங்குவர்; தேய்ப்பர். "அதியமானெனும் வீரனே; நீ பகைவர்க்குக் கதக் களிறு. எனக்கோ நீராட்டும் ஊர்ச் சிறுவர்க்கு நெளிந்து கொடுக்கும் அன்புருவம்" — என்று ஔவை பாடினாள். புறத்தில் இப் படியொரு பாடலுண்டு. அப்பாடல் அதியமானோடு அண்ணாவையும் நினைவு படுத்துகிறது. எல்லவர்க்கும் நெளியும் அண்ணாவிடமிருந்து வாழ்த்தை உனக்கு வாங்கித் தந்துவிடுவது மிக மிக எளிது. வாயார, உள மாரச் சொல்லார வாழ்த்துவார்.

தம்பி, நீ விரும்பும் வாழ்த்தாக அது அமையா தென்பதை நான் உணர்ந்து விட்டேன். நீ விரும்பும் வாழ்த்தினைப் பெற உன்னை வழி நடத்த எண்ணும் நான் சில அடிப்படைகளை உன் முன் நிறுத்த வேண்டியவனா கின்றேன்.

நம் நாடு திராவிட நாடு; அது நமக்குரிய போன் னேடு. அது மாற்றார்கைச் செப்பேடாய்க் கிடக்கிறது. அதை மீட்டாக வேண்டும். இது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் — அறிஞர் அண்ணாவின் மூலக் கொள்கை.

"திராவிட நாடு என்றொரு நாடு இருந்ததுண்டா?" என்பது உனது ஐய வினைக்களிலே ஒன்று. ஒரு உருவம் முன்னர் இருந்திருக்க வேண்டுமென்பது விதியல்ல. எங்கே இருந்த தாஜ் மகாலைப் பார்த்து விளங்கும் தாஜ் மகாலை உருவாக்கினான் ஷாஜகான்; எந்த நானூற்றைப் பார்த்து அக நானூறு எழுந்தது. ஆயினும் உன் ஐயப் போக்கிற்காக குறிக்கின்றேன் :—

"அந்த அரசிளங் குமரி சுயம்வரத்திற்கு ஐம்பத்தாறு தேசத்து மன்னரும் வந்தனர்" என்று கேட்டிருப்பாய். அங்கம், வங்கம், கலிங்கம் என்று தொடங்கும் அந்த ஐம்பத்தாறு தேசத்தில் திராவிட நாடும் ஒன்று. தமிழிலிருந்து மலையாளமும், தெலுங்கும், கன்னடமும் பிரிந்த பிறகு அமைந்தது இந்த ஐம்பத்தாறு எண்ணிக்கை. அதனால்தான் ஐம்பத்தாறுக்குள் மலையாளமும், ஆந்திரமும், கன்னடமும் தனித்தனியான நாடுகளாய்க் குறிக்கப்பட்டன. செந்தமிழ் பயிலும் நிலப் பகுதிதான் ஐம்பத்தாறில் திராவிடமாக வழங்கப் பட்டது.

இந்த "ஐம்பத்தாறு" காலத்திற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் தென்னாட்டை "திரௌ" என்றொரு மன்னன் ஆண்டானாம். அவன் பெயராலேயே திரௌ-இடம் திராவிடம் என்றாயிற்றென்பர் மொழியாராய்ச்சி வல்லுனர். மொழியியல்பறிந்த கவிஞர் தாகூர் அவர்கள், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் கூடிய நாட்டைத் தொகுத்து திராவிடம் என்று தற்கால நிலையறிந்து அமைத்தார். அவர் தந்த "ஜன கண மன"வில், பஞ்சாப சிந்து குஜராட்ட மராட்ட **திராவிட** உத்கல வங்கா" என்று திராவிடம்

ஒலிப்பது அறிந்தும் தானே இது தேசீய கீதமாக விளங்குகிறது.

'திராவிடம் — திராவிட நாடு என்ற சொல்லும் இடமும், இருந்ததுண்டா?' என்ற வினா மிகப் பழையது. இன்னும் இவ்வினாவைக் கேட்கும் "பசலிகள்" உண்டு என்பதற்காகவே நீயும் இந்த வினாவை விடுத்தாய் என்றுணர்கிறேன். ஆனாலும் திராவிடம் என்று இவ்வாறு இருந்ததால்தான் திராவிடம் கேட்கப் படுகிறது என்று நீ கருத மாட்டாய் என்றறிவேன். இருந்ததற்காகவல்ல இருக்க வேண்டியதற்கான மூலக் கொள்கைதான் "திராவிட நாடு திராவிடருக்கே" என்பது.

உடலுக்கு நலம் தரும் வெந்நீர் ஊற்றுக்கள் நிறைந்த செக்கோஸ்லோவேக்கியா பற்றிப் படித்திருப்பாய். கி. பி. 1918க்கு முன்னர் உலகப் படத்தில் அப்படி ஒரு பெயருள்ள நிலப்பகுதியை நீ கண்டிருக்க முடியாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அடிமையுற்றுக் கிடந்த பொகீமியா நாடுதான் 1918ல் விடுதலை இயக்கத்தால் விடுதலை பெற்று செக்கோஸ்லோவேக்கியாவாயிற்று. இந்த நாட்டின் பெயர் அறிவிக்கும் ஒரு உண்மையை உனக்கு நினைவு படுத்துகிறேன். செக்கர் என்ற இனத்தாரும் அவரோடு பெரும் பகுதி ஒத்த ஸ்லோவேகியரும் கூடி இயங்கிய இயக்கத்தின் வெற்றியே செக்கோஸ்லோவேக்கியா. இன்று டாலர் கும்மாளமிடுகிறதே அமெரிக்கா அந்த டாலர் என்ற நாணய அளவை "தாலர்" என்ற பெயரில் முதன் முதல் வழங்கியது இந்த செக் நாடுதான். நாகரீகப் பெருமையில் குறைந்ததல்ல செக் நாடு என்பதற்கு இதனை எழுதினேன்.

மேலும் இதைக் கொண்டு ஒரு செய்தியை உனக்கு நினைவு படுத்த எண்ணுகின்றேன். இந்த நாட்டு விடுதலை இயக்கத்திற்கு முதலில் முனைந்தவர் செக்கர் என்ற இனத்தவர் தான். பின்னர்தான் ஸ்லோவேக்கியர்களை யும் தம் பிரசார பலத்தால் இணைத்துக் கொண்டனர். வெற்றியும் கண்டனர். "உங்கள் நான்கு மொழியாட்சி இணைப்பு நாட்டை ஆந்திரரும் பிறரும் ஒத்துக் கொண்டனரா" என்று தானே புரிந்து கொள்ளாமல் கேட்கும் தமிழ் மேதைகட்கு இதனைக் கூறிக் காட்டு. இவ்வாறு விடுதலை பெற்றுத் தனி நாடாய் இயங்கும் நாடு நாம் விடுதலை பெற இருக்கும் திராவிடத்தின் நிலப் பகுதியில் சரி பாதியும் இல்லை என்பதையும் சொல்லிக் காட்டு. அங்கும் ஒரு **தாமஸ் முசாரிக்**கின் பிரசாரப் படை தான் வெற்றி கண்டது என்பது அவர்கள் நினை விற்காவது வரட்டும்.

தம்பி, மேற்பத்திகளிலேயே "திராவிடத்தை" மற்ற மொழியினர் ஏற்பாரா என்பதற்குக் குறிப்பான விடை யிருக்கிறது. மற்றொரு அவசியமான வினவை எழுதியுள்ளாய். "திராவிடம் பிரிந்துதான் ஆக வேண்டுமா?" என்கிறாய். இதற்குரிய பதிலை உன் முடிவுக்கே விட்டு விட எண்ணுகின்றேன். ஒன்றை மட்டும் உன் கருத்தாய்வுக்கு வைக்கிறேன்.

நீ சென்னையில் பயின்றக்கால் "மரம் நடு விழா" வின் கோலாகலங்களையும், திருவிளையாடல்களையும் கண்டிருப்பாய். மரம் செறிந்த காடுகள் வளம் பெருகும் மழையைத் தரும் என்பதை அறிஞர்கள் ஒத்துக் கொள் ளாமலில்லை. நாட்டு வளத்தின் கவலையால் ஆளவந்தவர் கள் செடியையும், கொடியையும், கன்றையும் நட்டு நட்டு

நீர் ஊற்றி ஊற்றி மரம் நடு விழா கொண்டாடியதை நினைக்குங்கால் உண்மைக் காட்சியை மறந்தாயினும் அவர்களை வாழ்த்த எண்ணியதுண்டு நான். தம்பி, இதை உன் உள்ளத்தின் ஒரு ஒதுக்கிடத்திலே வைத்துக் கொள்.

"திரை கடலோடியுந் திரவியம் தேடு" என்றொரு வழக்குள்ளதை நம்பிய தமிழர்கள் திரை கடலோடினர். மலேயா, சிங்கப்பூர், இலங்கை முதலிய கீழ்த்திசை தென் திசை நாடுகட்கு ஓடினர்; உழைத்தனர். உருவம் பெற்றனர். உருவும் உருவாக்கினர் அவ்வந்நாடுகளை. இப்போது உரிமையில்லை என்கிறது இலங்கை. அது மட்டுமா, பேயாட்டமாடிப் பார்க்கிறது. உயிரோட்ட முள்ளவரை போராடித் தீர வேண்டியதுதான் என்ற நிலைக்கு தமிழர் முனைந்துள்ளனர். கீழ்த்திசை நாடுகளில் பிற இனத்தவர் தமிழரை மதிக்கும் போக்கும் சிறுகச் சிறுகக் கட்டுப்பாடுகளை உருவாக்குவதிலும் எதிர்கால நடைமுறைகட்குச் சகுணங்களாக உள்ளன. பிற நாட்டில் தமிழர்களது இந்த நிலையையும் உன் உள்ளத்து ஓரத்திலே கிடத்திக் கொள்.

முண்டு தரித்தவர் தொடங்கி முடி சூடா மன்னர் வரை 'படேபடே' ஆசாமிகள் மறுத்தும் எளிதில் அமைந்த பாக்கிஸ்தானம் தான் உனக்குத் தெரியுமே. அங்கே வாழ்ந்து சிக்கிய இந்துக்களாம் அகதிகள் இந்திய நாட்டை நோக்கி நூற்றுக் கணக்கில் தொடங்கி பன்னூயிரக் கணக்கில் வந்து குவிந்ததும், குவிவதும் நீயறிந்த தொன்றே. அவர்களது நிலைத்த வாழ்வுக்காக ஒரு பெரு நகரமே உருவாக்க நம் மத்திய அரசாங்கம் நூறுயிரக்

கணக்கில் பொருளீடுசெய்ய முன்வந்துள்ளது. எங்கு எவ்வாறு தெரியுமா அகதிகள் நகர் உருவாகப் போகிறது? தண்டகாருண்ய அமைப்பு என்ற பெயரில், ஒரு பெரிய காட்டை அழித்து அங்கு ஒரு நகரை உருவாக்கும் பணிக்கு நம் பஞ்சசீலப் பிரதமர் — இலங்கை வாழ் தமிழர் பிரச்னை அந்த நாட்டுப் பிரச்னை என்று கூறிய நேரு பெருமானார், இதற்கு மனமொப்பியுள்ளார். அந்த அகதிகளிடையே உருப்பெருக்கிக் கண்ணாடி வைத்துப் பார்த்தாலும், ஒரு தென்னாட்டான் கிடைக்க மாட்டான். தம்பி, இதையும் ஒரு மூலையில் உன் உள்ளத்தே இட்டுக்கொள். இப்போது இந்த மும்முனைகளில் உன் கருத்தைச் செலுத்து.

ஒரு புறம் ஒரே இந்தியாவின் ஒருவகை குடிமக்களினத்தார் — தமிழர் வெளிநாடுகளிலிருந்து உதவி வேண்டியும் புறக்கணிக்கப்பட்டுப் போராடி மடிகின்றனர். மறுபுறம் வடவர் என்பதற்காக அகதிகள் எனும் பெயரில் அபயப் புராணம் நடைபெறுகிறது. மழை வளந்தரும் மரம் நடு விழாவைக் கொண்டாடிய — வடவர் வாழ்க்கைக்காகப் பெருங் காட்டை அழிக்க முன் வந்துள்ளது. இந்த நாடு - தமிழினமும் அதன் வழியினரும் நிறைந்த திராவிட நாடு பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாட்டில் ஐக்கியப் பட்டிருப்பதில் நன்மை விளையுமென்பதற்கு அறிகுறியா தம்பி இது? உன் பதிலுக்கு நான் காத்திருக்கவில்லை. இந்த உள்ளப்போக்கு உள்ளவர்களோடு கூடி வாழ்வதால் நன்மையுண்டு - நன்மை கிட்டியிருக்கிறது - கிட்டும் அறிகுறி தெரிகிறது என்று உனக்குத் தெரிந்தால் எனக்கெழுது.

ஏட்டுப் படிப்பும் நாட்டு நடப்பும் அறிந்த நீ தமிழ் நாட்டின் உள்ளோட்டத்திலும் கண்ணோட்டம் செலுத்தி இருப்பதை உன் கடிதம் தெளிவாக்கியது. ஆம். நீ எண்ணுவதைப் போல் தமிழகத்தில் தமிழர்கள் நிலையும் போக்கும், பல்வகைப் புதுமைத் தலைவர்களது நடப்பும் நாட்டமும் வியப்பாகத்தான் உள்ளன. உண்மையைச் சொன்னால் கேலிக்கூத்தாக உள்ளது. இந்த நேரத்தில் நம் குடும்பத்தின் வணிக வளர்ச்சி பற்றி ஒன்றைக் குறிக்கக் கருதுகிறேன்.

தலைமுறைக் கணக்கில் வணிகம் செய்பவர்கள் நாம். எந் நாளிலும், நொடிப் பொழுதிலும் வணிகப் பொறுப் போடு நிற்கிறோம். வளமோடு குறையின்றி வளர்ந்து வருகிறோம். பிறர் பொருளையும் நம் பொருள் போலப் பாவிக்கிறோம். கொடுப்பது குறைவும், கொள்வது மிகையுமின்றி இயங்குகிறோம். அதனால் தான் "வாணிகம் செய்வோர்க்கு வாணிகம்" என்ற வள்ளுவர் வாக்கைப் போல் வாணிகம் செய்வதற் கேற்ற ஊதியம் பெற்று வருகிறோம்.

நம் துலாக் கோலில் நெளிவு இல்லை; முள் முனையில் வளைவு இல்லை; படிக்கல்லில் மூளி இல்லை; நற் சொல்லுக்கும் குறைவு இல்லை. இவற்றால் வளர்கிறோம். பிறர் பார்த்து ஏங்கும் அளவுக்கும், எரிச்சல் கொள்ளும் அளவுக்கும் ஏறிட்டுப் பார்க்கும் அளவுக்கும் வளம் பெருகுகிறது.

வணிகத்திலே வளர்ந்து வந்தவர் பக்கத்துக் கடைக் காரர். ஆனால் சில காரணங்களால் தேய்ந்து போனவர். நம் வளர்ச்சி கண்டு வியக்கிறார். வியக்கும் அந்தப் பழைய

பரம்பரை வணிகர் தன் வியப்பை மறைப்பதற்காக இன்னும் உள்ளதைக் கொண்டு பெட்டியடியில் வந்து அமர்கிறார்; போகிறார், வருகிறார். ஏதோ பெயருக்கு வாணிபம் செய்கிறார். ஒரு செய்தி மறந்தேன். வெளி நாட்டுச் சரக்கையே விலையாக்குவது என்று எதிரில் கடை வைத்தாரே, அவர் "நாட்டுச் சரக்கு எடுபடாது" என்று எதிர்ப் பிரச்சாரமும் தொடங்கிவிட்டார். தன் வணிகம் போனாலும் போகிறதென்று எதிர்ப்பு முறையிலேயே கண்ணுங் கருத்துமாக நிற்கிறார். மற்றொரு பெட்டிக் கடைக்காரர் பழைய சரக்கை புதுக் குப்பியில் அடைத்து வழங்குகிறார்.

அங்காடிக் கடைகள் வேறு பெருகியுள்ளன. இவை கள் இருக்க முதலுமில்லாமல் சரக்குமில்லாமல், வணிக மும் இல்லாமல் வாடிக்கையுமில்லாமல் பெட்டியடியில் உட்கார்ந்து நம்மைப் பார்த்து மீசையைத் தடவுகிறார், அந்தப் பச்சை வியாபாரி. பல்வகைக் கடைகள் பெருகு வது தொழில் முறையில் வரவேற்கத் தக்கது தான். ஆனால் இவர்கள் எல்லாம் அவர்களுக்காக வாணிகம் செய்யவில்லை. நமக்காக செயல்படுகிறார்கள். உள்ளத் தில் நல்லோட்டமில்லை. அழுக்கு ஆறாய் ஓடுகிறது. இவ்வளவு இடையூறுகட்கிடையேயும் நாம் குறை வடைந்து விடவில்லை. இவைகளை அறிந்தும் அறியா தது போலவே நாம் நம் காரியத்தில் கருத்தாயுள்ளோம்.

தம்பி, நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்திற் கும் அறிஞர் அண்ணா அவர்கட்கும் இதே நிலைதான். ஏச்சு, பேச்சு, முறைப்பு, - ஏளனம், பேரம், சிரிப்பு இவை களின் சூழலிலே தான் தி. மு. க. வளர்கிறது. அண்ணா

மிளிர்கிறார். தணல் காட்டுத் தங்கக் கட்டியாய் அண்ணா ஒளிர்கிறார். காடு மணக்கும் கற்பூரமாய்த் தி. மு. க.வும் மிளிர்கிறது. இங்கே தான் நீ ஒரு நல்ல முடிவுக்கு வந் திருக்கிறாய். அறிஞர் அண்ணா அவர்களைப் பின்பற்றி அவர் வாழ்த்தினைப் பெற்றுத் தீர்வது என்று. இருப் பினும் ஓர் சிற்றெண்ணம் உன் உள்ளத்தில் தடுமாறிக் கொண்டு இருப்பதையும் காட்டியிருக்கிறாய். நாம் கைக் கொள்ள இருக்கும் கொள்கைகளால் நாட்டு நலிவெல் லாம் தீர்ந்து விடுமா என்ற புகை யெண்ணம் ஒன்றும் உன்னிடம் தென்படுகிறது.

நாட்டிலே நலிவிருக்கிறது; நிறைய இருக்கிறது. நன்றாகத் தெரிகிறது. மறைக்க முயல்வோருக்கும் தெரிகிறது. மறைக்க முயல்வோரையும் மீறிக்கொண்டு தெளிவாகிறது. மக்களிடையே பொருளாதார நலிவு உளது. சமுதாயத்திலே அமைதியும், மதிப்பு மற்ற நலிவு உளது. அரசியலிலே இருள் கப்பிக் கொண்டிருக் கும் வானம் போன்ற நலிவு உளது. சுருக்கமாகக் கூறி னால் பொருளாதாரமும் சமுதாயமும், அரசியலும் நோய் வாய்ப் பட்டுள்ளன. இந்த நோய் நீங்க வேண்டும். நீக்கியாக வேண்டும். நோய் நீக்கும் நல்ல மருத்துவரைக் காண வேண்டும். அந்த மருத்துவரைப் பின்பற்றி நீ நடந்தாக வேண்டும். திராவிட இனமும் நடந்தாக வேண்டும்.

உடற்பிணி மருத்துவரென்றும்; பசிப்பிணி மருத் துவரென்றும்; அறியாமைப் போக்கும் மருத்துவரென் றும் மருத்துவர் பல்வகையினர். இவ்வகையினர்க்கெல் லாம் மேம்பட்ட மருத்துவர் ஒருவருண்டு. அவர்தான்

நாட்டுப் பிணி போக்கும் மருத்துவர். ஒவ்வொரு நாட்டிலும் அவ்வந் நாட்டினை நோய் பற்றுங்கால் பற்பல மருத்துவர் தோன்றுவதுண்டு. தென்னகமாம் திராவிடத்திற்கும் நோய் பதப்பட்டிருக்கும் இந்நேரத்தில் அரசியல் மருத்துவர் அறிஞர் அண்ணா அவர்கள் தக்க பணி புரிகிறார். அண்ணா என்றால் அவரது தம்பிமார் அனைவரையும் உள்ளடக்கி நிற்கும் ஒரு சொல்லாகக் கொண்டுதான் கூறுகிறேன். யாவரும் முனைந்து நின்று திராவிடத்தின் பெரும் பிணியை நீக்குவதிலே பணிபுரிகின்றனர். இவர்களெல்லாம் காட்டும் ஒரே மருந்து திராவிட நாட்டுப் பிரிவினை என்பது தான். ஆம். அது தான் எல்லாவகைப் பிணிகட்கும் மாமருந்து.

நோய் இன்னது என்பதை நாடிப் பிடித்தறிந்து நோய்க்குக் காரணத்தை அறிந்து அதனைப் போக்கும் எளிய வழியறிந்து மருத்துவம் வாய்க்குமாறு செய்வதை நல்ல மருத்துவனின் இலக்கணமாக வகுத்தார் வள்ளுவர்.

தென்னாட்டின் நோய் சமுதாய ஏற்றத் தாழ்வு என்னும் வெப்பு நோயெனக் கண்டனர். அதற்குக் காரணம் பொருளாதாரச் சீரழிவும் ஆழப் பதிந்துபோன சாதி மதப் பிணக்குகளும் தான் என அறிந்தனர். அதனைப் போக்கும் ஒரே வழி மொழிவழி பிரிந்த இனம். இனவழி ஒன்றுபட்டுத் தனித் திராவிட ஆட்சி அமைப்பது தான் எனக் காணப்பட்டது. அதற்குரிய வாய்ப்பான செயல்களாக பிரசார இயக்கம், கொள்கைவிளக்கம், ஜனநாயக அமைப்பு முறையான செயல்கள், சட்டமன்ற நுழைவு முதலியன மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந் நடவடிக்கைகளால் ஒரு வகையான நல்ல சூழ்நிலை தோன்றியிருப்

பதும், தென்னகத்து அரசியலே ஒரு திருப்பு முனையில் நிற்பதும், பேராதரவு திரண்டு வருவதுமான அறிகுறிகள் நாட்டின் நோய் நீங்கும் முன்னறிவிப்புகளாக உள்ளன. இப் பணியில் இறங்கினோர் - இறங்க நினைக்கும் உன் போன்றோரது அபார உழைப்பால் முழு வெற்றியும் கிட்டத்தான் போகின்றது. திராவிடம் உறு பசியும் ஓவாப் பிணியும், செறு பகையும் சேராதியலும் நாடாகவும், பிறரை நாடாத அளவு வளந்தரும் நாடாகவும் மிளிரத்தான் போகிறது. ஒன்று மட்டும் நினைவு படுத்துகிறேன்; பொறுப்புணர்ந்து கடமையாற்றுவதும், செய்வன திருந்தச் செய்வதும், தொண்டென்று நினைத்துச் செய்வதுமான செயல்களை மறந்து விடுதல் கூடாது.

திராவிடம் தனி நாடாக வாழ்தற்குரியது என்பதையும், திராவிட இனம் பழம் பெருமை வாய்ந்தது என்பதையும் விளக்கி இதுவரை திராவிட முன்னேற்ற கழகத்தார் வழங்கியுள்ள கருத்துக்கள் உன் நினைவில் நிற்குமென்று கருதுகின்றேன். சில்லாண்டுகளாக தொழில் துறையில் இறங்கிய நீ சிலவற்றை மறந்திருக்கலாம் என்பதற்காகத் தான் மேலே சில குறிப்புகளை உனக்கெழுதினேன். அந்தக் குறிப்புகளோடு நான் மேலே தர இருக்கும் செய்திகட்குத் துணையாக ஒரு குறிப்பை இங்கு தரலாமென்று கருதுகின்றேன். அது தான் அண்ணாவைப் பற்றியது.

ஒரு முறை நம் வீட்டிற்குத் தமிழ்நாட்டின் தலைமையான தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் வந்திருந்தார். நம் வீட்டுக் கூடத்திலே விளங்கும் அண்ணாவின் படத்தைப் பார்த்தார். அந்தப் படத்தைக் கொண்டு என்னையும்

படம் பிடித்துக் கொண்டார். பண்பறிந்த அவர் நான் இல்லாதபோது, அங்குள்ளோரிடம் "தமிழ் வாழ்க என வாயார வாழ்த்துவோர் அண்ணாத்துரையும், அவரைப் பின்பற்றுவோரும் தான்" என்றார். அண்ணாவின் பெருமையை வெளிப்படுத்துவதற்காக இதனைக் குறிக்க வில்லை நான். அந்தப் பேராசிரியரது சொற்றொடரிலேயே ஒரு அரசியல் உண்மை பொதிந்திருப்பதைச் சுட்டவே குறித்தேன். எந்த இனம் தன் மொழி நிலையை உணர்ந்து செயலாற்றுகிறதோ அந்த இனம் செப்பம் பெறும் என் பது உலகத்துச் சான்றோர் தம் கருத்து. திராவிட முன்னேற்றக் கழகம் காலத்தின் பக்குவமறிந்து, மொழி நிலையுணர்ந்து செயல்படத் தொடங்கியது. வரலாற்றிற் காணப்படும் நுணுக்கமான உண்மையைக் கண்டறிந்த திராவிட முன்னேற்றக் கழகம் மொழிக் கருவி கொண்டு தான் நம் நாடு அடிமைப்படுத்தப்பட்டது என்பதைக் கண்டது. மொழி யுணர்ச்சியை முதலிலூட்டும் பணியை மேற்கொண்டது குறிப்பிடத்தக்க அளவு வெற்றியும் கண்டுள்ளது.

தென்னாட்டில் அடிமைப் பிணி தலை தூக்கிய காலம் பல்லவர் காலம். வடவரையும் வடமொழியாளரையும் இறக்குமதி செய்தனர் பல்லவர். தம் தலைநகராம் காஞ்சி புரத்தில் அவர்கட்குப் பல்வகை வசதிகளும் தந்தனர். "கடிகை" என்னும் வடமொழிக் கல்லூரிகள் கண்ட னர். ஆலயங்களிலே, அரண்மனைகளிலே, அரசியலிலே வடமொழியாளரையே அமர்த்தினர். 'தமிழைவிட வட மொழி சிறந்தது. தமிழிற்கும் கடன் தந்த பெருமை யது' - என்ற கருத்துக்களை அறிந்தோ, அறியாமலோ ஊட்டினர். காஞ்சிபுரத்தில் சிறிதளவு அடியில்

மண்ணைத் தோண்டி அதைப் பேசச் செய்தால் அது வடமொழிதான் பேசும் தம்பி. சிறிதளவு தோண்டி எடு என்றேன். இப்பொழுது தோண்டி எடுக்க வேண்டுமென்றேன். அதே காஞ்சியில் தோன்றிய அண்ணாவின் சொல்லெனும் தென்றல் கலந்த நீர் பாய்ந்து பாய்ந்து மேற்புற மண்ணெல்லாம்கூட தமிழ் தான் பேசும். இன்னும் சிறிது காலம் கழிந்தால் அடிப் புற மண்ணும் அப்படித்தானாகும். அதனாற்றான் அவ் வாறு கூறினேன்.

சோழன் நலங்கிள்ளி நல்ல தமிழ் கவிஞன். பாண்டியன் நெடுஞ்செழியன் நல்ல தமிழ்ப் புலவன். சேரமான் பெருங்கடுங்கோ பாலைபாடிய பெருங்கடுங்கோ என்று போற்றப்படும் அளவு தமிழறிஞன். அது போன்று அக்காலத்துக் குறுநில மன்னர்களும் பெருநிலக் கிழார்களும் தமிழறிந்தவர்கள். அறிந்த அறிவோடு தமிழைப் பேணியவர்கள். தமிழ் பேணப் படுவதால் தான் தமக்குள்ளிருந்த சிறு பூசல்கள் பிறரால் பயன் படுத்தப்படாமல் தம்மைக் காப்பாற்றும் என்ற எண் ணத்தினர். ஆனால் பல்லவ மன்னன் நரசிங்கன் வட மொழி வல்லுனன். புறத்திலே அகத்திலே சேர சோழ பாண்டியரது தமிழ்ப் பாட்டு மிளிர்கிறது. காஞ்சியிலே திருச்சி மலைக்கோட்டையிலே பல்லவனது வடமொழிச் சுலோகம் கல்லிலே ஒலிக்கிறது. அதே காஞ்சிபுரத் திலே ஆண்ட தொண்டைமான் இளந்திரையன் என்னும் சோழ மரபினன் ஒரு தமிழ்ப் புலவனாகவும் திகழ்ந்தான். அதே காஞ்சியில் பல்லவர் ஆளத் தொடங்கினர். தமிழை மறந்தனர். மாறாக வடமொழியை வளர்த் தனர். காஞ்சி மண்ணைக் குறை சொல்ல மாட்டேன்.

தான் ஏற்ற தவறுகட்கெல்லாம் கழுவாயாக அறிஞர் அண்ணாவைத் தந்துள்ளதல்லவா? பாவம்! நிலம் என்ன செய்யும்? "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்ற ஔவை வாக்குப்போல் நல்லவர் ஆடவர் அண்ணாவால் காஞ்சியும் நல்ல நிலனாகிவிட்டது. கி. பி. எட்டாம் நூற்றாண்டில் தொடங்கிய மொழிப் பிணி இந்த நாட்டை விட்டு அகல 12 நூற்றாண்டுகள் ஆகியிருக்கின்றன. அவ்வளவு வேரூன்றி 1200 ஆண்டுகள் அடிமையாகிப்போன நாட்டை மீட்டாக வேண்டும். பெரும் பணியாயிற்றே என்றஞ்ச வேண்டாம். எளிய பாதை அறிஞர் அண்ணாவால் வகுக்கப்பட்டுவிட்டது. நடக்கும் முறையைத்தான் நீ வகுத்துக் கொள்ள வேண்டும். அது என்ன நடக்கும் முறை என்று கேட்பாய். அதற்குரிய பதில்தான் நீ "அண்ணாவின் வாழ்த்தினைப்" பெறுவதற்குரிய வழி. தம்பி.........! இடையில் ஒரு புதுப் பிரச்சினையை உன் அண்ணி கொண்டு வந்துள்ளாள். உன் கடிதத்தோடு உன் அண்ணிக்கும் ஒரு கடிதம் வந்ததாகக் குறித்தேனே; அக் கடிதத்தை எழுதியவர் யாரென்று உன் அண்ணிக்குத் தெரியவில்லையாம். "அன்புள்ள அக்காளுக்கு என்று தொடங்கி, அன்புள்ள வேண்மாள்" என்று முடிகிறதாம். மன்னார்குடியிலிருந்து அனுப்பப்பட்டுள்ளதாம். தனக்கு அறிமுகமான பெண் இல்லை என்றும் உள்ளே உள்ள செய்திகள் இனிப்பாக இருந்தாலும் தனக்குத் தொடர்புடையன அல்ல என்றும் கூறுகிறாள். திருவாட்டி சேரமாதேவி, அண்ணா இல்லம், நாகப்பட்டினம் என்று முகவரி தெளிவாக உள்ளது. உள்ளே உள்ள செய்திகள் உன் அண்ணி வாயால் வெளிப்படவில்லை. அடுத்த கடிதத்திற்குள் வெளிப்படுமானால் எழுதுகின்றேன்.

வணக்கம்.

உன் நல்வாழ்வை விரும்பும்,

**"சேரமான்"**

"சேரமான்"

அண்ணா இல்லம்,
நாகப்பட்டினம்,
5—4—'58.

தம்பி வெளிமானுக்கு.

வணக்கம். நலம்; நலம் விளைக.

**தேறற்க யாரையும் தேராது : தேர்ந்தபின்**
**தேறுக தேறும் பொருள்.**

'எவராயிருப்பினும் அவரைப் பற்றி ஆராய்ந்து பாராமல் அவரைத் தெளியக்கூடாது. ஆராய்ந்து தெளிந்த பிறகோ அவரிடமிருந்து தெளிவாகக் கொள்ளத்தக்க பொருள்களைத் தெளிந்து நம்ப வேண்டும்' — என்பது மேற்குறித்த குறளில் வள்ளுவர் தந்த தெளிவுரை. தம்பி, ஒருவரைத் தெளிந்து கொள்வதற்குரிய இக் கருத்தை இக்கடிதத்தின் தொடக்கமாகக் கொண்டதன் காரணத்தின் ஒரு பகுதி உனக்குப் புரியும். மறு பகுதி என்று உள்ளதா என்ன (?) என்றெண்ணுவாய். உள்ளது.

அறிஞர் அண்ணா அவர்களை நீ நாட்டுப் பணிக்குரிய வழிகாட்டியாகத் தேர்ந்து தெளிந்துள்ளாய். தெளிந்ததற்கேற்ப அவரிடமிருந்து கொள்ளத்தகும் பொருள்களையும் தெளிய உணர்ந்தாய். அப்பொருளில் நம்பிக்கையோடு செயலாற்றும் எண்ணத்தையும் கொண்டுவிட்டாய். இனி இதனின்று மாறுவது உன்பால் நிகழாது. அவ்வாறு மாறுவது தீராத துன்பத்தையே தரும்.

'ஆராயாது தெளிவு கொள்தலும் தீராத துன்பத்தைத் தரும். ஆராய்ந்து தெளிந்த பிறகு ஐயங்கொண்டு தயங்குதலும் தீராத துன்பத்தைத் தரும்' என்பது வள்ளுவர்தம் வாய்மையல்லவா?

நாட்டு வாழ்வுக்குப் பொருந்திய இக்கருத்து வீட்டு வாழ்வுக்கும் ஏற்றதுதான். வீட்டு வாழ்வாம் இல்லறத்தின் துணையாகக் கொள்ளத்தக்கவரைத் (அவனுயினும் சரி, அவளாயினும் சரி) தெளிவதற்கும் இக்கருத்து இன்றியமையாததாகும்.

நீயாக முனைந்து நின்று நல்ல தலைவரை நாட்டுப் பணிக்குக் கொண்டுவிட்டாய். உனது இச்செயல் எனக்கு மகிழ்வைத் தந்துளது. இது போலவே என் தூண்டுதலால் நல்ல துணைவியை தேர்ந்தறிய வேண்டிய காலம் இப்போது உனக்கு நேர்ந்துள்ளது. அரசியற் பேச்சுக்கிடையே வீட்டியல் பேச்சு வருவது உனக்கு வியப்பாக இருக்கலாம். உனது முன் கடித இறுதியில் உன் அண்ணிக்கு வந்த கடிதம் பற்றிக் குறித்திருந்தமை உன் நினைவில் நிற்கலாம். இந்த இடைக் காலத்தில் அறிமுகமாகாத பெண் அனுப்பிய கடிதத்தை வைத்துக்கொண்டு உன் அண்ணி ஒரு பெரிய ஏற்பாட்டையே தொடங்கி விட்டாள். செய்திகளை அறிந்தால் நீயும் வியப்படைவாய்.

வேண்மாள் என்ற பெண் ஆசிரியப் பணியாற்றும் குமரியாம். பணியாற்றும் பள்ளி நிர்வாகியையே மணம் செய்து கொள்ள வேண்டுமென்று அவள் தந்தையும் எக்காரணமாகவோ வற்புறுத்தினுராம். அந்த நிர்வாகியின் பண்பின்மை காரணமாக அதை விரும்பாத வேண்மாள் மன்னூர்குடியிலுள்ள தன் தமக்கைக்குத் தன் நிலையை விளக்கிக் கடிதமொன்று எழுதினுள்.

'தந்தை இவ்வாறு வேண்டா வேலையில் முனைகிறார். வேறு திருமண ஏற்பாட்டை நீ செய்வதுதான் நான் தப்ப வழி. நான் உறுதியாக நிற்கிறேன். நீ துணிவாகச் செய்க! நானே நாணத்தை விடுத்து இவ்வாறு எழுதுவதினின்று ஏற்பட்டுள்ள நிலையைத் தெளிந்து கொள்க!' – என்பது தான் கடிதத்தின் கருத்து. கடிதங் கிடைத்த தமக்கை உன் அண்ணியின் பள்ளித் தோழி. அந்தத் தமக்கையார் வேண்டுமென்றே தன் தங்கையின் கடிதத்தை வேறு தன் குறிப்பு ஒன்றுமின்றி இங்கே அனுப்பி விட்டனர். இதை யறியாத உன் அண்ணியார் திடீர்த் துணிவுடன் வேண்மாளுக்கே கடிதமெழுதி விட்டாள். 'என் மைத் துனர் ஒருவர் உள்ளார்; அவர் இத்தகையவர்; உன் திருமண எண்ணம் பற்றிய விளக்கத்தையும் உன் குடும்ப நிலையையும் விளக்குக' என்பது அக்கடிதத்தின் கருத்து. கடிதங் கிடைத்த வேண்மாள் ஒன்றும் விளங் காதவளாய் ஏதோ தவறு நேர்ந்துவிட்டதென்று நேரே அக்கை வீட்டுக்குச் சென்று அக்கையைக் கலந்தபின் உண்மை தெளிவாயிற்று. குறும்பு செய்த தமக்கையோ தங்கைக்குச் செய்திகளை விளக்கி அனுப்பிவிட்டு நேற் றைய முன்தினம் இங்கு வந்திருந்தனர். அடுத்த வாரம் ஞாயிறன்று உனக்கும் எங்களுக்கும் மன்னார்குடியில் விருந்தாம். தேர்ந்து தெளிதலும் தெளிந்து நம்புதலு மாகிய மற்றுமொரு முயற்சி உனக்கிருப்பதை இப் போதே அறிவித்துக் கொள்கிறேன். தக்க காலத்தில் தான் யாவும் உனக்கு நேர்கின்றன என்று கருதுகின் றேன். இது பற்றிய உன் கருத்தை – பெண் பிடிக் கிறதா என்ற கருத்தைத்தான் – வரும் ஞாயிற்றுக் கிழமைக்கப்பால் அறிந்து மகிழக் காத்திருக்கிறோம்.

இடையே ஒரு சிறு கதை புகுந்துவிட்டது. அக வாழ்விலும் புற வாழ்விலும் ஒரே நேரத்தில் புகுவது என்பது கிடைத்தற்குரிய ஒன்றுமல்ல; முனைந்து மேற்கொள்ளுவது எளிதுமல்லதான். ஆயினும் உன் உள்ளத்தில் இப்போது நிற்கும் ஆர்வத்திற்கு இது துணையாக அமையக் கூடும். இல்லறத்திற்கு அண்ணாவின் வாழ்த்தினை உனக்குப் பெற்றுத்தர உன் அண்ணியார் செய்த தொண்டு இது.

இனி நாட்டறத்தில் அண்ணாவின் வாழ்த்தினை உனக்குப் பெற்றுத் தரும் என் கருத்துரை தொடர்கிறது. இந்நேரத்தில் அறிஞர் செஸ்டர் பீல்டின் கடிதமொன்று என் நினைவிற்கு வருகிறது. ஜெர்மனியில் பணியாற்றிய பீட்டர் என்னும் இளைஞன் தன் தந்தை செஸ்டர் பீல்டுக்குப் புத்தாண்டுப் பரிசு ஒன்று அனுப்ப இருப்பதாகக் கடிதமெழுதி யிருந்தான். அதற்குப் பதிலாக பீல்டு எழுதிய கருத்துரை இது :– நீ எனக்குப் புத்தாண்டுப் பரிசனுப்ப இருப்பது கேட்டு மகிழ்ந்தேன். அப் பரிசை எவ்வளவு உயர்வுடையதாகச் செய்கிறாயோ அவ்வளவுக்கவ்வளவு மகிழ்வேன். ஆயினும் நான் உன்னிடமிருந்து விரும்பும் மிகச் சிறந்த பரிசு தகுதிவாய்ந்த மகனைப் பெற்றிருக்கிறேன் என்ற எண்ணமே. ஆகவே புத்தாண்டு தோறும் உன் தகுதிகளைப் பெருக்கிக் காட்டுக." மகன் தன் தகுதியிலே உயர வேண்டும்; நிலைக்க வேண்டும். அதைப் பார்த்துத் தந்தை மகிழ வேண்டும்; வாழ்த்த வேண்டும். இதுதானே செஸ்டர் பீல்டின் கடிதம் தரும் கருத்துரை. மகன் எந்தச் செயல் புரிந்து தன்னை மகிழ்விக்க வேண்டுமென்று தந்தை விரும்பினாரோ அதேபோல் தம்பியாம் உன் நாட்டுத்

தொண்டின் தகுதி கண்டு அண்ணாவும் அண்ணா வாழ்த்த வேண்டும். இதுதான் நீ விரும்புகின்ற வாழ்த்தும் என்று புரிந்து கொண்டேன்.

தம்பி, அறிஞர் அண்ணாவின் சிந்தனை, சொல், செயல், கனவு எல்லாம் திராவிடத்தின் மீட்சியிலே நிற்கின்றன. கண்ணும் கருத்துமாய், கவலையும் கட்டுப்பாடுமாய் முனைந்து நின்று திராவிட முன்னேற்றக் கழகம் செயலாற்ற வேண்டுமென்று கருதுகிறார். அவருக்கு நீ ஒரு புதுமைத் தம்பி. உன் தொண்டின் பங்கு ஓரளவேனும் தோள் கொடுக்க வேண்டும் என்று கருதுகின்றேன். அதற்கு பணி நிறைய உண்டு.

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆயிரத்தெண்ணூறுக்கு மேற்பட்ட கிளைக்கழகங்கள் உண்டு. நாலாயிரத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் உண்டு. கிளைக் கழகங்களும் உறுப்பினர்களும் பொலிவோடுவிளங்குகின்றன — விளங்குகின்றனர். ஆயினும் திராவிடநாட்டு விடுதலை முயற்சிக்கு இந்த எண்ணிக்கைகள் போதுமானவை யல்ல. சாதாரணமாக ஒவ்வொரு மாவட்டமும், சராசரி நானூற்றுக்கு மேற்பட்ட சிற்றூர்களைக் கொண்டுள்ளது. இதை வைத்துக்கொண்டு சிற்றூர்க்கொரு கிளைக்கழகம் என்று கணக்கிட்டுப் பார்த்தால் இப்பொழுதிருக்கும் எண்ணிக்கை மிகக் குறைவென்பது படும். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உடனடியாகச் செய்யவேண்டிய முதல் தொண்டு உனக்கு உண்டென்றால் கிளைக்கழகங்களை உண்டாக்குவது தான் என்று கூறுவேன்.

சிற்றூர்க் கழகம் - நகர்க் கழகம் - வட்டக் கழகம்; மாவட்டக் கழகம்; தலைமைக் கழகம் என்ற தொடரில் நம் திராவிட முன்னேற்றக் கழகம் அமைந்திருப்பதை நீ அறிவாய். இந்த அமைப்பு முறையோடு பிரச்சார இயக்கமாகப் பணியாற்றிய திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த மாநில மாநாட்டின் முடிவுப்படி தேர்தலில் ஈடுபட்டு அரசியற் களத்தில் தோள் தட்டிக்கொண்டு இறங்கிவிட்டது. முதற் சுற்றிலே தான் கண்ட வெற்றியைப் பெரிதாகக் கருதாது போனுலும் இருக்கும் ஆதரவைப் புரிந்து கொண்டுள்ளது. ஆனுல் இருக்கும் ஆதரவுகளை ஒன்றுகூட்டி அமைப்பாக்கும் முயற்சி போதுமான அளவு செய்யப்படவில்லை. அம் முயற்சி தான் கிளைக் கழகங்களை உருவாக்குவதாகும். கிளைக் கழகங்களை உருவாக்குவதுதான் இன்றியமையாக் கடமையாகும். இன்றியமையாதது மட்டுமல்ல. தேர்தல் என்னும் தேர்க்குரிய அச்சாணியுமாகும். கிளைக் கழகங்களை உருவாக்கும் பணியை முன்னிறுத்தி உன் தொண்டுகளைத் தொடங்கச் சொல்லும் நான் உன் பணியினை மூன்று வகையினதாக்கிப் **படிப்படியாகச்** செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இடையே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கு நான் குறிக்கும் செய்திகளெல்லாம் புதியனவல்ல; புதுமைக் கருத்துக்களும் திட்டங்களுமல்ல. நிகழ்ந்தவை; நிகழ்ந்து வருபவைதான். ஆனுல், தொடர்ந்து இன்னும் முனைவோடு நிகழ வேண்டியவை. இது பெருங் கடமை என்பதை உணர்ந்து உன்போன்ற ஒவ்வொருவரும் முழு மூச்சோடு செய்ய வேண்டும் எனும் தூண்டுதலுக்குத் தான் இவை குறிப்பிடப் படுகின்றன என்பதை நினைவிற்

கொள்க. வளர்கிறது என்றெண்ணிப் பூரித்துப் போன தால் தளர்ந்து நிற்கும் கட்சிகளையும் பார்க்கிறோமல்லவா? வளர்ச்சி என்பது தொடர்ந்து பணியாற்றுவது, ஆய்ந் தோய்ந்து பணியாற்றுவது, ஆர்வத்தோடு பணியாற்று வது. **பணி** என்பது **எண்ணி** ஆற்றுவது. பழகிப் போன தொண்டுகளையே மேலும் முனைந்து நின்று செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் தான் கீழே குறிப்பிடும் செய்திகளில் உன் நோட்டத்தைச் செலுத்த வேண்டும்; நாட்டத்திற் கொள்ள வேண்டும்.

உன் பணி மூன்று வகையினதாய் அமையவேண்டு மென்றேன். அமைப்புப் பணி, கொள்கை விளக்கம், கழகத்திற்கு உரமூட்டல் ஆகிய மும்முனைப் பணிகள் உன்னால் கைக்கொள்ளப்படுதல் நன்று. இம் மூன்றை யும் படிப்படியாகச் செய்ய வேண்டும் என்று நான் குறித் தமை ஒன்றை முடித்து மற்றதைத் தொடங்க வேண் டும் என்ற கருத்திலல்ல. முதற் பணியாக அமைப்புப் பணியைக் கருத வேண்டும் என்பதற்கே அவ்வாறு குறித்தேன். அமைப்புப் பணியோடு கொள்கை விளக்க மும் செறிந்திருப்பதை நீ யறிவாய். இவை யிரண்டா லும் மற்ற உதவிகளாலும் கழகம் உரம்பெறும் என்ப தும் வெளிப்படை. நீ கைக்கொண்டிருக்கும் வணிகத் துறைக்கும் ஊறில்லாதவாறு நீ செயலாற்ற வேண்டும் என்பது என் எண்ணம். தனி மனிதனைப் பொருத்த வரை வீட்டைப் பலப்படுத்தி அடிப்படையாக்கிக் கொண்டுதான் நாட்டைப் பலப்படுத்த வேண்டும்.

நான் எழுதும் இக்கருத்து தன்னலம் வாய்ந்ததாக உனக்குப் பட்டாலும் படலாம். அவ்வாறு படுதல்

கூடாது என்பதற்காகத் திருவள்ளுவரை எனக்காக உன்பால் சாட்சியாகக் காட்டுகிறேன். இல்லறத்தானின் பொறுப்புகளை உணர்த்தும் வள்ளுவர் பதிஞேரு வகையார்க்கு இல்லறத்தான் பொறுப்புள்ளவன் என்ருர். அவருள் ஐவரை அவன் ஓம்பும் கடமைப்பட்டவன் என்ருர்.

**தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை —** [என்ருங்கு

என அவ்வைவரையும் குறித்தவர் ஐந்தாவதாகத் **தன்னையும்** இல்லறத்தான் ஓம்ப வேண்டும் என்ருர். இதை நினைப்பின் நான் முன்னர் குறித்தது தன்னலக் குறிப்பன்று என்பது விளங்கும். தான் தானே காரியம் செய்ய வேண்டும். சுவரை வைத்துத்தானே சித்திரம் தீட்ட வேண்டும். அதனுல் அவ்வாறு குறித்தேன். ஆகவே உன் வணிகப் பணியிலும் வாழ்க்கைப் பணியிலும் தற்போது உள்ள அளவே ஊக்கத்ினைக் கொள்க அடுத்த இன்றியமையாக் கடமையாகக் கழகப் பணிகளைத் தொடங்குக.

தம்பி, இவ்வாறு, கழகப் பணியைத் தொடங்குமுன் நம் அரசினர்க்கு முதற்கண் நன்றி கூறுக. வாரத்தில் ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை - விடுமுறை தந்து அந் நாளில் உன் போன்றவர்கள் கழகத்தை வளர்க்க வாய்ப் பளித்திருக்கிருர்கள் அல்லவா! அதற்கு நன்றி கூறி விடுக. இதை எழுதும் நேரத்தில் நேற்று செய்தித் தாளிலே பார்த்த செய்தி ஒன்று நினைவிற்கு வருகிறது. "வணிகர்கள் அரசியலில் பங்கு பெறுவது கூடாது. அது தவிர்க்கப்பட வேண்டும்" என்று ஒரு 'பெருந்தலை' அழுதிருக்கும் செய்திதான் அது. இச் செய்தி அரசாங்

கத்தின் - ஆளுங் கட்சியின் இடுப்பொடிவையும், நிகழ் கால ஆயாசத்தையும், எதிர்காலத் தளர்வையும் காட்டும் குறியே யன்றி வணிகர்க்கு அச்சுறுத்தலேயோ, இடையூறு தந்துவிட முடியுமென்ற ஊக்கத்தையோ காட்டுவதல்ல. அரசாங்க வருவாயின் வாயிற்படியாகிய வணிகத்தினரை எதிர்த்து வாழ்ந்த அரசாங்கம் வரலாற்றிலுமில்லை. வாய்ப் பேச்சிலுமில்லை. வைர உள்ளங்கொண்ட நீ இச் செய்தியைக் கண்டு தளர்பவனல்ல என்பதை அறிவேனுதலால் வடவர் அரசியலின் தளர்வுக்கு இதனைக் காட்டியுள்ளேன். மேலே எடுத்த கருத்திற்குச் செல்வோம்.

கிழமையின் முதற்கிழமையாம் ஞாயிற்றுக்கிழமை நம் கழகத்தின் முத்திரைக் கிழமை. வாரத்தில் முதலில் தோன்றும் – உதயமாகும் நாள் ஞாயிற்றுக் கிழமையல்லவா? அந்நாளை நம் கழகப் பணிக்கெனக் கொள்வது சொல்லமைப்பு வகையிலும் பொருத்தமானதே. தம்பி, ஞாயிற்றுக்கிழமை கழகப் பணிக்கே உரிய நாள் என்று சூளுரைத்துக் கொள்க! அன்று இல்லத்து – வணிகத்து வேலைகளைக் கூடுமான அளவு ஒதுக்கிக் கொள்க; மறந்து விடுக. ஒரு மூன்ருண்டுகள் இவ்வாறே செய்தே தீர்வது என்ற முடிவை நீ முதலிற் கொள்ளவேண்டுமென்பது என் வேண்டுகோள்.

பின் உன் நகர்க்கிளையின் செயலாளரிடம் நீ பணி செய்ய முன்னுக்கு வருவதை அறிவித்து அவர் ஒப்பம் பெறுக. உன் வட்டத்திற்குட்பட்ட சிற்றூர்கள், அவ்வூர்களின் மக்கள் தொகை ஆகிய இவற்றின் கணக்குகளைத் தொகுத்துக் கொள்க. ஊர்கள் அமைந்த திசைகளைக் காட்டும் அளவுக்கு உன் வட்டப் படம் ஒன்று

குறிப்பாகத் தயார் செய்க. நகரிலிருந்து புறப்பட்டால் தொடர்ந்து எல்லாச் சிற்றூர்களையும் தொட்டுச் செல்லும் வகையில் அப்படத்திலே பாதைக் கோடிட்டுக் கொள்க. அப்பாதைக் கோட்டின்படி சிற்றூர்களின் வரிசைப் பட்டியல் ஒன்று தயார் செய்து கொள்க. இதற்கெனக் கழகச் செயலாளர் அமைக்கும் நால்வர் அல்லது ஐவர் கொண்ட ஒரு குழுவை அமைத்துக் கொள்ளலாம். மூன்றாண்டுக் காலத்தில் ஒவ்வொரு ஊரையும் குறைந்தது ஐந்து முறையாவது இக் குழு கண்டு தொடர்பு கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தையும் கொள்தல் வேண்டும்.

பின் வட்டத்துச் சிற்றூர்களில் எத்தனை ஊர்களில் கிளைக்கழகங்கள் அமைந்துள்ளன? அமைந்த ஊர்களின் உறுப்பினர் தொகை - உண்மையான ஆதரவு நிலை ஆகியவற்றைப் பற்றிய தனித் தனிக் குறிப்புக்களைத் தொகுத்துக் கொள்க. கிளை அமையாத ஊர்களில் கிளைகளை அமைக்கும் பணிதான் அடுத்துத் தொடங்க வேண்டியதாகும். கிளை அமையாத ஊர்க்குப் பக்கத்தே உள்ள தி. மு. க. கிளையினரின் உதவிகொண்டு அவ்வூரை அணுகுதல் முறை. இருபத்தைந்துக்குக் குறையாத உறுப்பினர் அமையுமாயின் ஒரு கிளை அமைத்து விடுவதென்பதை நீ அறிவாய். அவ் வெண்ணிக்கை அமையாது போயின் பக்கத்தே உள்ள கிளைக் கழகத்தில் அவரைச் சேர்ப்பது அல்லது கிளை அமையாத ஊர்களில் 25 எண்ணிக்கை சேரும் அளவு சேர்த்து ஒரு கிளையை நல்லாதரவு உள்ள ஊரில் அமைப்பது என்ற முறையை மேற்கொள்க. ஒவ்வொரு அமைப்பும் வட்டக் கழகம், மாவட்டக் கழகம், தலைமைக் கழகம் ஆகிய

வற்றில் முறையே பதிவாக வேண்டும் என்பதை நீ அறிவாய். அம் முறையையும் நினைவிற்கொள்க. இதற்கு வேண்டிய உறுப்பினர் சீட்டு, கைச்சாத்து முதலியவற்றிற்குச் செயலாளர் உதவிக் கிட்டும். ஒரு ஞாயிற்றுக் கிழமை ஒரு கிளையாவது கண்டோம் என்பதும் பெருமைக்குரியதுதான். அங்கங்கு சென்று வரும் செலவுக்கு என்ன செய்வதென்று கருதாதே. நம் கைப்பணமும் இயன்ற அளவு ஈடுபடுத்தப்படத்தான் வேண்டும். தருமம் என்ற பெயரால் நடக்கும் செலவுகளையும் பொழுது போக்கிற்கென தனிப்பட்டவர் செலவுகளையும் சிறிது குறைத்துக் கொள்ளத்தான் வேண்டும். அண்ணனைக் கருத்துரைக் கேட்கப் போய் சுமையான வேலை வந்துவிடும் போலிருக்கிறதே என்று சிந்திக்கமாட்டாயென்று கருதுகிறேன். சும்மா இருந்தால் சுகம் வருமா? முயற்சியல்லவா திருவினையாக்கும். உனக்குக் கிடைக்க இருப்பது சாதாரணமானதல்ல தம்பி; அறிஞர் அண்ணாவின் வாழ்த்து; நினைவிருக்கட்டும். பெற இருக்கும் முழுப் பயன் நீரின் குமிழி இன்பமல்ல தம்பி; நம் பரம்பரை பரம்பரைக்கும் அமையும் தேனூட்டமுள்ள வாழ்வு. வருந்தி உழைத்தாக வேண்டிய பக்குவமான காலம் இது.

இந்த நல்ல பணிக்கு உனது இயல்பான குணம் ஒன்றும் துணை நிற்கும் என்பதை யறிவேன். உன்னிடம் பணிவான சொல்லும் இன்முகப் பழக்கமும் எக்காலத்தும் திகழ்வதைக் கண்டு மகிழ்ந்துளேன். உன் பணிவுப் பண்பே உனக்குப் பெருமையை நல்கித் தீருமென்று வள்ளுவப் பெருந்தகையார் என்னிடம் கூறியுள்ளார்.

**பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து —**

என்ற குறளின் முற்பகுதி உனக்கெனவே எழுதப் பட்டதாக எனக்குத் தோன்றுவதுண்டு. ஒருவன் பெருமையடைவதற்கு அறிகுறி அவனது பணிவு என் பதையல்லவா வள்ளுவர் அவ்வாறு கூறினர். பொதுப் பணியில் இறங்குவோர்க்குப் பணிவுடைமை இன்றியமை யாத ஒன்று. வீண் பெருமைக்குத்தான் வள்ளுவர் சிறுமை என்ற சொல்லைக் கையாண்டார். அதனுல் தான் தன்னைத் தானே புகழ்ந்து பாராட்டிக்கொள்ளும் வீண் பெருமையைச் சிறுமை என்று அக் குறளின் பிற் பகுதியிலே குறித்தார். அத்தகைய சிறுமையும் செறுக் கும் உன்பால் இல்லாத இயல்பான பண்புகள் நீ இறங் கும் பொது பணிக்குச் சரியான துணை என்று குறித்தேன். இயக்கப் பணியில் ஈடுபட விரும்பும் நீ பல்வகையான இயல்பினருடன் பழகவேண்டி நேரும். அவர்கட்கேற்ப பண்புத் தன்மையில் பழகுவதை மறந்து விடாதே.

**உயிரோட்டமுள்ளவனுகப் பழகு.**

தமிழில் ஒப்புரவு என்ற பொருள் பொதிந்த சொல் உண்டு. அச்சொல் பொதுப்பணிக்காகவே அமைந்தது என்பேன். கைம்மாறு வேண்டாத கடமை; பிறர்க்கு உதவவே நம் முயற்சி என்ற எண்ணம்; ஊருணி போல் உதவுவது; பழு மரம்போல் பயன் படுவது; மருந்து மரம்போல் துன்பத்தை மறந்து தழைப்பது; வறுமை யிலும் உதவி உள்ளம் - ஆகியவற்றையெல்லாம் தொகுத்து நிற்கும் ஒரு சொல் ஒப்புரவு என்பது. சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் கைகொடுக்கும் செய லைத்தான் இவ்வாறெல்லாம் விரித்து ஒப்புரவு என்ற சொல்லால் குறிப்பர் தமிழ் முன்னோர். ஒப்புரவினுல் கேடே வருவதில்லை. கேடு வருவதாயினும் அக்கேட்டை

விலைகொடுத்தேனும் வாங்கலாம் என்றார் வள்ளுவர். முதலில் கேடாகக் காட்சி தந்தாலும் பிறகு நிலைத்த நன்மையாயமையும் என்பதை அவ்வாறு குறித்தார். அவரே 'ஒப்புரவறிந்து பொதுவில் பழகுபவனே உயிரோடு கூடிவாழ்பவன்; மற்றவன் நடைப்பிணம்' என்றார். அதனால்தான் உயிரோட்ட முள்ளவனைப் பழகு என்று குறித்தேன்.

கிளை கழக அமைப்பை வற்புறுத்தி வந்த நான் இடையே சில பண்புகளைக் குறிக்கக் காரணம் பொதுத் துறையில் இறங்குங்கால் தான் புகழுடைய வேண்டும், ஒரு தலைவனுகிவிட வேண்டும் என்ற எண்ணம் தலை நீட்டுவதுண்டு. அந்தப் புகழ் வேட்டையிலிறங்குவது எடுத்த காரியத்தை சிதைத்துவிடும். பெரும் பணி ஓய்ந்து போகும். அதனுல் நம் நாடல்லவா சாய்ந்து போகும்! தவருகக் கருதாதே. இதனை நினைவு படுத்தாது விட்டால் என் கடமையில் மறதியை மேற்கொண்டவனுகி விடுவேன். ஆதனுல் தான் குறித்தேன்.

கிளைக்கழக அமைப்பின் போதும் அவர்களுடன் தொடர்பு கொள்ளும் போதும் நமது மூலக் கொள்கைகளை ஒவ்வொரு உறுப்பினர்க்கும் உணர்த்தியாக வேண்டும். அவரவர்கள் தம்மால் இயன்ற அளவு அக்கொள்கைகளைத் தம் வீட்டாரிடம் — வீட்டில் தன் நிலைக்கேற்பச் சொல்லி வைக்க வேண்டும். என்பதை வலியுறுத்த வேண்டும். கூடுமாளுல் மூலக் கொள்கைகளைக் கொண்ட ஒரு சிறு அறிக்கையை அச்சிதழாக்கிக் கொண்டு செல்லுதல் உதவியாக அமையும். இவைகட்குப் பின்னர்தான் பொதுக்கூட்டம் மூலம் கொள்கை விளக்கம் செய்யும் முயற்சியைத் தொடங்க வேண்டும்.

முதற் பணியும் இன்றியமையாத பணியுமாகிய அமைப்புப் பணியைத் திருந்தச் செய்துள்ளோமா என்பதை அமைப்புக்கு அமைத்த குழுவினர் கூடி ஆய வேண்டும். ஒவ்வொரு கிளைக்கழக அமைப்புப் பற்றியும் ஒரு தனிச் சுவடியிட்டு அதனதன் செய்திகளைப் பதிந்து கொள்தல் நலம். பின்னர் அந்தந்த கிளைச் செயலாளர் இசைவுக்கேற்பப் பொதுக்கூட்ட ஏற்பாடுகள் செய்ய வேண்டும். பொதுக்கூட்ட அமைப்பு என்னும் போது முன்பு நீ குறித்திருந்த செய்தி ஒன்று என் நினைவிற்கு வருகிறது. "நான் பேசிய கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் மிகச் சிரமப்பட்டார்கள். பொருளுக்கும் ஏற்பாடுகளுக்கும் ஓடித் திரிந்து பாடுபட்டதைக் கண்டு அவர்களது ஆர்வத்தை எண்ணிப் பூரித்தேனாலும் அவர்களது முட்டுப்பாட்டை எண்ணிச் சோர்ந்து விட்டேன்" என்று உனது சொற்பொழிவு அனுபவம் பற்றிக் குறித்திருந்தாய். நீ மேடையேறிப் பேசும் திறனடைந்துள்ளாய் என்பதறிந்து மிக மிகப் பூரித்துப் போனேன். நம் இயக்கத்தில் தேர்ந்த பேச்சாளர்கள் உண்டென்றாலும் தேவையை நிறைவாக்கும் அளவுக்குச் சொற்பொழிவாளர் பஞ்சமில்லை என்று கூறமுடியாது. ஆயிரத்தெண்ணூறுக்கு மேற்பட்ட கழகங்களைக் கொண்ட இயக்கத்திற்கு – அதிலும் பொதுமக்களால் விரும்பி ஏற்கப்படும் சொற்சுவைக் கருத்துக்களைக் கொண்ட இயக்கத்திற்குச் சொற்பொழிவாளர் எண்ணிக்கைப் பல்கிப் பெருக வேண்டும் என்பது என் எண்ணம். இவ்வெண்ணம் கொண்ட எனக்கு ஒரு சொற்பொழிவாளன் தோன்றியுள்ளாய் என்பதாலும், என் தம்பி ஒரு சொற்பொழிவாளர் என்பதாலும் இரட்டிப்புமகிழ்ச்சியே.

ஆயினும் கூட்டமமைப்போரது இடுக்கண்களை நீ குறித்ததை எண்ணும்போது இந்த மகிழ்ச்சியெல்லாம் பறந்து விடுகின்றன. ஆர்வமிருக்கும் அளவு பொருள் வசதியும் ஊரார் ஒத்துழைப்பு வசதியுமற்ற நம் இயக்கத் தோழர்கள் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதென்றால் உடல் கருத்து இளைத்தும் போகிறார்கள். உள்ள உரமற்ற ஒரு சிலர் உள்ளந்தளர்ந்து சிதைந்தும் போகிறார்கள். அவர்கட்கு உதவியாக அமையும் வகையில் உனது இரண்டாவது பணியாகிய கொள்கை விளக்கப் பணி அமைதல் வேண்டும்.

கிளைக் கழக அமைப்புக்களைத் தொடர்ந்து இயங்க வேண்டியது கொள்கை விளக்கந்தான். இயக்க ஏடுகள், இயக்க நூல்கள், இயக்க முன்னணியாளர்களது சொற்பொழிவுகள் ஆகிய யாவும் கொள்கை விளக்கக் கருவிகள் தான். இவற்றுள் எல்லாம் சொற்பொழிவுகள் தான் சிறந்த பயன்தரும் கருவியாக இருந்து வருகிறது. அதனை ஒவ்வொரு கிளைக்கும் அமைத்துத் தருவதை வட்டக்கழகச் செயலாளருடன் நீ செய்வது நல்லுதவி என்பேன். பொது மக்கள் ஆர்வத்தையும் கிளைக் கழகத்தார் வேண்டுகோளையும் ஈடுகட்டும் அளவு பேச்சாளர் இல்லாத பற்றுக்குறை தென்படுவதை நீயறிவாய். அறிஞர் அண்ணா அவர்களோ அவர் தம் தம்பித் தோன்றல்களோ ஒவ்வொரு ஊருக்கும் ஒரு முறையேனும் சென்று வந்தாவதென்றாலும் பல்லாண்டுகளிலும் இயலாத காரியம் என்ற அளவுக்கு இயக்கம் பெருகியுளது. அதனால்தான் பேச்சாளர்கள் மின்னியக்க வேகத்தில் ஊருக்கு ஊர் பறந்து கொள்கை விளக்கம் தரவேண்டி நேருகிறது. இவ்விடர் தீர நீ செய்ய வேண்டிய பணி இரண்டுண்டு.

ஒன்று, புதுமைப் பேச்சாளர்களை அறிமுகப் படுத்த வேண்டும். புதுமைப் பேச்சாளனாகிய நீயும் அவ்வக்கால அரசியல் நிலைக்கேற்ற செய்திகளைத் தொகுத்து குறை நேராத அளவுக்கு விளக்கம் தரும் எண்ணத்தைக் கொள்தல் வேண்டும். தரம் குறையாத பேச்சு, மூலக் கொள்கையை விட்டு நழுவாத பேச்சு, பல்வகையினரும் கூட்டத்தில் உண்டு என்றுணர்ந்து வெளியிடும் பேச்சு ஆகியவை கவனத்தில் நிற்க வேண்டியவை. ஏதோ இந்தக் கூட்டத்தை முடித்தோம் என்று செய்தால் சந்து விட்டால் வந்து விட்டேன் என்று திரியும் புறங்கூறிக் கழுகுகளின் வெறும் வாய்க்கு அவல் அள்ளிப் போட்ட நிலை வந்து நேரும். ஆகவே புதுமைப் பேச்சாளர்கள் கண்ணுங் கருத்தும் உள்ளவர்களாய் இருக்கத் தூண்டி அவர்களைக் கொண்டு கூட்ட அமைப்பைச் செய்தல் வேண்டும். "கூட்டுக்கு ஒரு சுவை; பணத்திற்கு ஒரு மதிப்பு; புதுசுக்கு ஒரு மவுசு" என்பது நாட்டு வழக்கு. உள்ளூர் மேளத்திற்கு மதிப்பில்லை என்பது நம் நாட்டுப் பிணி. இதையும் உன் உள்ளத்தில் கொண்டால் வேற்று மாவட்டப் புதுமைப் பேச்சாளரைக் கொண்டு கூட்டம் அமைப்பது நல்லதென்று கொள்வாய். ஆனால் அது போன்ற செயலில் ஒன்றை மனத்துட் கொள்ள வேண்டும். கூட்டம் நடக்கும் ஊர்நிலையை அவ்வூர்த் தோழரைக் கொண்டு அறிந்து அதற்கேற்றப் பேச்சாளரைப் பக்குவப் படுத்தி மேடையேற்ற வேண்டும்.

மற்றொன்று, பொதுமக்களின் விருப்பைக் கவர்ந்த பேச்சாளர்களைக்கொண்டு கூட்டத்தை அமைப்பது. இப் பணியில் நீ ஒரு முறையைக் கையாள்வது நல்லதென் பேன். நீ பணியாற்றும் வட்டத்தில் ஒருவார நிழ்கச்சி

கட்கென நம் முன்னணிப் பேச்சாளர் ஒருவரை வட்டச் செயலாளர் உதவியுடன் ஏற்பாடு செய்து கொள்ளல் வேண்டும். அந்தந்தக் கிளைக்குக் கூட்ட நாளை உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறமையும் கூட் டங்களைக் குறைந்த அளவு பத்து மைல் இடைவெளி கொண்ட இடங்களில் தொடர்ந்து அமைப்பது நல்லது. கூட்டங்கட்கு நல்ல வசதியுடன் பேச்சாளரை அழைத்துச் சென்று கொள்கை விளக்கமாற்றச் செய்து அவர் களைப் பேணி அனுப்புதல் வேண்டும். நீ கூட்டங்கட்குச் செல்ல நேர்ந்தாலும் இது போன்று ஒரு வார நிகழ்ச்சி கட்குப் போய் வருவாயானால் நீ முன் குறித்தபடி கூட்டம் ஏற்பாடு செய்தவரின் நிலைகண்டு வருந்த வேண்டி நேராது. எளிய செலவாலும் கூட்டம் நிகழும். கொள்கை விளக்கமும் முறைப்படி பரவும்.

கொள்கை விளக்கக் கருவிகளில் முக்கியமான சொற்பொழிவு அமைப்புப் பற்றிச் சில குறிப்பான செய்தி களையே உனக்கெழுதினேன். மேலும் இக்கடிதத்தில் ன்றினைக் குறிக்கலாம் என நினைக்கிறேன். கிளைக்கழக அமைப்பு வேலைகள் இயங்கி கூட்டங்களும் நிகழ்த்தப் படும்போது அவ்வக் கிளைக்கழகங்களில் விரிவு, வளர்ச்சி ஆகியனவற்றையும் கவனித்தல் வேண்டும். உறுப்பினர் பெருக்கம், கழகத்திற்கெனச் சிற்றிடம் வாடகைக்கோ உரிமைக்கோ அமைதல் ஆகியவை கிளைக்கழகங்களின் விரிவும் வளர்ச்சியுமாயினும் அத்தோடு மற்றொன்றை யும் மனத்துட்கொள்ள வேண்டும். அது ஒவ்வொரு கிளைக் கழகமும் ஒவ்வொரு **அறிவுக் கூடமாய்த்** திகழ வேண்டும் என்பதேயாகும். ஒரு கழகப் பணிமனை திராவிட இயக்கத்தின் கொள்கைகளைப் படமாகவும்,

புள்ளி விவரமாகவும் முடிந்தால் சிற்பங்களாகவும் நூல் களாகவும் காட்டி வருவோர் மனத்திற் பதிக்கும் அளவு அமைப்பதையே அறிவுக் கூடமாக்குதல் என்று குறித் தேன். இதற்குப் பெரு முயற்சியும் பல்லோர் ஒத்துழைப் பும் தேவைதான். நான் உனக்குக் கூறியதைப் போலவே ஞாயிற்றுக்கிழமையை இயக்கப் பணிக்கென ஒதுக்கிக் கொள்க என்று நீயும் பிறர்க்குக் கூறி அவ்வாறே செய்யத் தூண்டு.

தம்பி, ஆறின கஞ்சி பழங்கஞ்சி என்பதை எண்ணி யும், அண்ணனின் கருத்துக்களை உடனே மேற்கொள்ள வேண்டும் என்ற உனது இயல்பான பழக்கத்தைக் கொண்டும் வரும் ஞாயிற்றுக் கிழமையிலேயே உன் பணி யைத் தொடங்கி விடாதே. அதற்கடுத்த ஞாயிற்றில் உன் எண்ணத்திற்கேற்ப தொடங்குக. இந்த ஞாயிற்றில் நீ மன்னார்குடியில் விருந்துண்ண வேண்டும் என்பதை மறக்காதே. திருமண ஏற்பாடென்றால் இப்பொழுது ஒன்றும் வேண்டாம்” என்று ஏக்கத்தோடு சொல்லை வெளிப்படுத்தும் கண்மூடிப் பூனையல்ல நீ. காலத்திற்கேற்ற செயல்களை அவ்வக்காலங்களில் செய்து தீர்த்துவிட வேண்டும் என்ற உன் கொள்கையை நம்பியே ஞாயிற்றுக்கிழமை விருந்தேற்பாடு செய்யப் பட்டுள்ளது.

மன்னார்குடியில் சந்திக்குங்கால் பிற செய்திகளை அறிவிக்கிறேன். உன் நாட்டுப்பணிகட்கு என் கருத்துரை யாகத் தொடங்கிய நான் அதனை மூன்று வகைப்படுத்திக் குறித்தேன். ஒன்றை விளக்கி முடித்துவிட்டேன். இரண் டாவதைத் தொடங்கிப் பாதியில் நிறுத்தியுள்ளேன்.

அதனையும் மூன்றாவதனையும் பற்றிய கருத்துக்களை நேரிலோ அடுத்த கடிதத்திலோ தருகிறேன்.

"அதைச் செய்ய வேண்டும். இப்படிச் செய்ய வேண்டும்" – என்று இப்பொழுதே தொடங்கியிருக்கும் உன் அண்ணியின் தொந்தரவிலிருந்து விரைவில் மீண்டு விட நினைக்கிறேன். உன் ஒத்துழைப்பும் வேண்மாளின் ஒத்துழைப்பும் என்னை மீட்குமாக. வணக்கம்.

உன் நல்வாழ்வை விழையும்,

**"சேரமான்"**

" சேரமான் "

அண்ணா இல்லம்,
நாகப்பட்டினம்,
6—5—'58.

அன்புள்ள வெளிமான் – வேண்மாளுக்கு.

வணக்கம். நலம். வாழ்க! வாழ்க! வளமோங்கி வாழ்க! உங்கள் திருமண வேலைகளின் மும்முரத்தால் தற்போதுதான் உங்கட்கு என் வாய்மொழி வாழ்த்தை வழங்க முடிந்தது. என் உள்ளத்தே தேங்கிக் கிடக்கும் உங்கள் நல்வாழ்வு பற்றிய எண்ணம் வாழ்க என்று சொல்லாகி வழியாது போனால் உள்ளம் வெடித்தாலும் வெடிக்கும் போலும். வாழ்க என்னும் வாழ்த்தொடு நிற்கும் நிலையினன் அல்லவே நான். வாழ்விற்குரிய எடுத்துக்காட்டுகள் தந்து வாழ்விற் செலுத்தும் குடும்பத் தலைவனல்லவா. அதனால் வாழ்க என்னும் சொல்லோடு மட்டும் நிறுத்திக் கொள்ள விரும்பவில்லை.

கண்ணன் என்றொருவன் உண்டு. [கண்ண பெருமானல்ல] அவன் தெளிவான கண்ணை யுடையவன். அதனால்தான் அவனுக்கு அப்பெயர் வந்தது என்பர். அவன் ஒருநாள் தன் கண்ணுடன் பேசிக் கொண்டிருந்தான். கண்ணிடமிருந்து பதில் கிடைக்காதென்பது அந்த நேரத்தில் அவனுக்குப் படாது. அத்தகைய நிலையில் அவன் கண்ணுடன் பேசினான். பேசிய பேச்சும் எவரும் கண்டு வியக்கத் தக்கது; பேசியவனைப் பார்த்துப் பைத்தியக்காரனோ என்று ஐயப்படத்தக்கது. "கண்ணே – கண்ணின் கருமணியிலுள்ள கண் பாவையே; நீ எனக்கு வேண்டாம்; எங்கேனும் தொலைந்து விடு;

உடனே போயவிடு. நீ இருக்கும் இடம் தேவைப் படுகிறது. காலி செய்து விடு. இடம் அவசியமாகத் தேவைப் படுகிறது. வேறு எந்த இடமும் இல்லை. அப்படி இருந்தாலும் உன்னிடத்தைத்தான் பயன்படுத்தப் போகிறேன். யார்க்கு இடம் வேண்டும் என்று கேட்கிறாயா? தன் நெற்றியின் எழிலாலே என்னைக் கவர்ந்தவள் ஒருத்தியுண்டு. நான் அவளை எந்த அளவு விரும்புகிறேனென்று விளக்கச் சொல்லில்லை. நயமாகச் சொன்னால் அவள் நெற்றியழகால் என்னை வீழ்த்தியே விட்டவர். அவளை உன் இடத்திலேயே வைத்துப் பார்க்க விருப்பம். அவளுக்கு வேறிடம் கொடுக்க இல்லை. கொடுத்துவிட்டாலும் எப்பொழுதும் அவளைக் காண முடியாது போகும். அத்தோடு அவளைக் கொண்டே நான் உலகத்தைக் காண விரும்புகிறேன். ஆகவே வேறு இடம் தர விருப்பமில்லை. அவள் யாரென்று கேட்கிறாய். அவள் என் மனைவி ஆகையால் போய்விடு கண் பாவையே" – என்று பேசினான் அந்தக் கண்ணன்.

கண்ணிலே இடம்பெற இருந்த அந்தக் கண்ணி இவனுக்கு கண்ணி வைத்த கன்னி போலும்! அதனால் தான் கண்ணில் வைக்கிறான் இவன். கண்ணிலே வைக்கும் அவனைக் கண் அவன்—கணவன் என்றனர் உலகோர். கண்ணன் என்றேன் நான்.

அந்தக் கண்ணி இருக்கிறாளே அவள் பொல்லாத கள்ளி. ஒருநாள், "பசிக்கிறதடி தோழி; பசி கிள்ளுகிறதடி வயிற்றை" என்றாள். இவள் துடிப்பைக் கண்டு துடித்துப்போன தோழி நொடிப் பொழுதில் சோறு படைத்தாள். சூட்டுக்கு ஒரு சுவையாயிற்றே என்று சூட்டோடு உணவு படைத்தாள். உண்ண உட்கார்ந்தாள்

பசியால் துடித்தவள். அவள் அள்ளி அருந்தும் அழகைக் காணக் காத்துக் கிடந்தாள் தோழி. ஆனுல் துடித்தவள் துன்பத்துள் ஆழ்ந்தவள் போல் தூங்கி வழிந்தாள். "பசிக்கிறது என்று துடித்தாயே ; உண்ணவில்லையா"– இது தோழியின் வினு. "சோறு சுடுகிறதடி" இது தலைவியின் பதில். "சுடு சோறுதானே. பின் எப்படி இருக்கும் ? உனக்கும் அதுதானே எப்பொழுதும் விருப்பம்" என்ருள் தோழி வியப்போடு. ஆமாம். என் நாவைச் சுட்டுவிடும் என்று எண்ணிச் சுடு சோற்றை வெறுக்கவில்லையடி நான். என் நெஞ்சத்தைச் சுட்டு விடுமடி. என் நெஞ்சத்திற்காகவும் அஞ்சவில்லையடி நான். அந்த நெஞ்சத்திலே அவர் இருக்கிருரடி. வெம்மைச் சோற்றை உண்டால் என் நெஞ்சத்தில் ஊறிக் கிடக்கும் அவரைச் சுட்டுவிடுமே என்று அஞ்சுகிறேன். ஆகவே ஆறட்டும். சிறு நேரம் பொறு" என்று ஒரே மூச்சில் தன் உள்ளத்தைக் கக்கிவிட்டாள் மனைக்குரிய மனைவி.

கண்ணன் சொல்வதைக் கேட்டுக் கண்பாவை போகாது. போவதையும் அவன் உளமார விரும்பமாட்டான். ஆனுலும் 'போ' என்கிருன். அவள்மேல் அவனுள்ளம் அப்படி பதிந்திருக்கிறது. கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்பதை அறிவான். ஆனுலும் அதையும் மீறும் சிறப்பைத் தந்தான் அவன். அவன் கணவன்.

"சோறு சுட்டு நெஞ்சு வெந்தவரில்லை. நெஞ்சம் ஒரு பொருளே யல்ல. அங்கு தங்கியிருக்கும் தலைவனைச் சோறு சுடும் என்பது பைத்திய எண்ணம். இதனை அவள் அறியாதவள் அல்ல. அவனுக்கு அவள் தந்திருந்த

அன்பின் ஆழம் – தந்திருந்த உள்ளம் அவ்வாறு எண்ண மலே பேசச் செய்தது. அவள் மனைவி.

வெளிமானே! வேண்மாளே! இவர்கள் இருவரை யும் நீங்கள் இருவரும் கண்டிருக்கலாம். நினைவில்லாது போனால் வள்ளுவர் கட்டிய 1123-ம் எண்ணுள்ள வீட்டி லும், அவ்வீட்டையடுத்த ஐந்தாவது வீட்டிலும் (குறள் 1128) பாருங்கள். காணக் கிடைப்பார்கள். அவர்கள் இருவரையும் உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாக அறிமுகப் படுத்துகிறேன். அவர்கள் போல் – அவர் களாய் வாழ்க!

நாகையில் நம் இல்லத்தில் நிகழ்ந்த உங்கள் திருமண நிகழ்ச்சியும் முறையும் நாகை மக்களிடையே ஒரு புதுமை எண்ணத்தை கெல்லியுள்ளது.

"விடியலில் மாவட்டப்பதிவாளர் உதவியால் பதிவுத் திருமணம் நிகழ்ந்தது. அதுபோது சூழ்ந்திருந்த இன்றி யமையா உறவினர், நண்பர்களது மலர்ந்த முகங்கள் மிளிர்ந்தன. அவை வழங்கிய வாழ்த்துக்கள் மலர்ந்தன. மாலையில் தென்றல் மல்லிகையில் பட்டு மீளும் நேரத்தில் ஒரு இன்னீர் விருந்து நடந்தது. அடுத்துப் பெரியோர் தலைமையில் அறிஞர்தம் பாராட்டுரைகளும், வாழ்த் துரைகளும் மணந்தன. சிக்கனம் கலந்த எளிதான விழா வாக இந்த மணமக்கள் இணைந்தனர். அவர்கள் வாழ்வு எளிமையும் அமைதியுமாகத்திகழும்" என்று நல்லவர்கள் பேசிக் கொண்டதைக் கேட்டு என் உள்ளம் குளிர்ந்தது.

தம்பி, இனி நடக்கும் மணங்கட்கெல்லாம் எடுத்துக் காட்டாய் அமையும் முறையை வகுத்துக் கையாண்ட உன் திறனைப் பாராட்டுகிறேன். ஆனாலும் உன் தீராத

நண்பன் என்பதற்காக ஒரு "ஆரவார உளறலைப்" பேச விட்டது பாராட்டுக் கூட்ட மேடையில் களங்கமாக விளங்கியதை நீயும் கண்டிருப்பாய். இதனை நீ கொள்கை விளக்கப் பணியில் இறங்குங்கால் கொள்ள வேண்டிய கண்காணிப்புக்கு முன்னறிவிப்பாகக் கொள்க.

பொதுக்கூட்ட அமைப்பில் விளம்பரமும் மேடை அமைப்பும், விளக்கமைப்பும், மேடைக்குரிய கண்காணிப்பும், கருத்தொடு கவனிக்க வேண்டியவை என்பதை இதைச் சமயமாகக் கொண்டு உனக்குக் குறிக்க விரும்புகிறேன்.

பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு முன்கூட்டி நாட்கள் இருப்பின் முதன் முதலில் கூட்ட நாளை மட்டும் அறிவித்தல் வேண்டும். நாளை மக்கள் முன் பதியவைத்த பின் பேச்சாளர் பெயரையும், பொருளையும், இடத்தையும், நேரத்தையும் படிப்படியான மும்முரத்துடன் அறிவித்தல் வேண்டும். மற்ற விளம்பரக் கருவிகளை நீ யறிவாய். பொதுக்கூட்ட மேடை, பேச்சாளர் உருவத்தை மறைப்பின்றித் தெளிவாகக் காட்டுவதாய் உயர்வாய் அமைதல் வேண்டும். அலங்காரங்கள் பேச்சாளர்க்கு மறைப்புக் கருவிகளாக இருக்கக் கூடா. இடமறியாது விளக்கு அமைப்பைச் செய்வதால் பேச்சாளர் கொசுக்கள், விட்டில்களுடன் போராடிக் கொண்டு இடை நேரத்தில் வந்த பணியைக் கவனிக்க நேர்ந்த கூட்டங்களை நான் கண்டு அவலப்பட்டிருக்கிறேன். மேலும் பலர் அமரும் அளவுக்கு மேடையை அமைப்பதால் வீணான 'சுற்றுப் பரிவாரங்கள்' மேடையை நிறைத்துக் கொண்டு தனி மாநாடு நடத்துவதும் நிகழும். மேடை கண்காணிப்பிற்கென கனிவோடு கண்டிப்புள்ள ஒருவரை அமைத்தல்

நலம். அல்லது செயலாளர் அவ்வாறு ஆகிவிடுதல் அதைவிட நலம்.

தலைவர் வந்தாரென்றால் 'ஒட்டகமும் கழுகுமாய்த்' தலை நீட்டி ஆரவாரித்துவிட்டுத் தொண்டும் தேர்தலும் வருகிற தென்றால் 'நண்டும் தவளையு'மாய் மறைவோர் காங்கிரஸ் இயக்கத்தைச் சிதைத்துக் காட்டியிருக்கிறார்கள். தம்பி, நீ முன் ஒரு முறை குறித்தது என் நினைவிற்கு வருகிறது. "எனக்கு உங்கள் இயக்க கொள்கை தான். ஆனாலும் தேர்தலில் நிற்பவர் அறிமுகமாகாதவராயினும் என்..........." என்று இழுத்து ஆள் காணாமல் நழுவிவிட்டவர்களைப் பற்றி நீ குறித்திருந்தாய். "அவர்களை யெல்லாம் இயக்க நட்பினர் பட்டியலிலிருந்து நீக்கிவிட்டேன்" என்ற உனது எழுத்துக்கள் இன்னும் என் கண்முன் நிற்கின்றன. அத்தகைய நீ இயக்கப் பணியில் முனைய இருப்பதை எண்ணுங்கால் திராவிடம் கிடைத்துவிட்டது போலவே மகிழ்கிறேன் தம்பி, அத்தொடு உன் பண்புக்கும் பணிக்கும் துணை நிற்கும் வேண்மாளை நீ இல்லாளாகப் பெற்றிருப்பதை எண்ணுங்கால் நான் வளமார் திராவிடத்தில் வாழ்வது போலவே களிக்கிறேன்.

உங்கள் திருமண நினைவாக இயக்க நண்பர்கட்கும், அவர்தம் இல்லத்துப் பெண்கட்கும் வேண்மாள் ஓர் விருந்தமைக்கப் போவதாகவும், அவ்விருந்து நாளில் திராவிட மகளிர் மன்றம் அமைக்க இருப்பதாகவும், கூறும் வேண்மாளின் கடிதத்தை உன் அண்ணி காட்டக் கண்டு மகிழ்ந்தேன். போட்டியோடு பணி தொடங்குகிறது போலும்! நீ யில்லாத ஞாயிற்றுக்கிழமை

வேண்மாளுக்கும் கசப்பாகி விடக்கூடாதல்லவா? நல்ல ஏற்பாடுதான். இவ்வேற்பாட்டைப் பரப்புக.

மற்ருெரு நல்வாய்ப்பு உங்கட்குக் கிட்டியிருப்பதை எண்ணி மகிழ்கிறேன். மணம் பெற்று மணக்கும் நீங்களிருவரும் கூடி தி. மு. க. மாநில மாநாடொன்றைக் காணச் செல்வதைத்தான் குறிக்கிறேன். மேலை நாடுகளில் மணம் முடிந்ததும் மணமக்கள் 'தேனிலவுப் பயணம்' போவர். உன் உள்ளத்தில் தற்போது எழுந்திருக்கும் ஆர்வத்திற்கேற்ப உன் 'தேனிலவுப் பயணம்' மாநாட்டுப் பயணமாயமைந்துள்ளது. உங்கட்கெனச் சொல்லி வைத்தாற் போல் மாநாடு அமைந்துளது. கொள்கை விளக்கப் பணியின் முத்திரை நிகழ்ச்சியான மாநாட்டை நீயும் நிகழ்த்திக் காட்ட வேண்டுமல்லவா? அதற்கு ஒரு அனுபவ வாய்ப்பு உனக்குக் கிட்டியிருக்கிறது. மாநாட்டு ஏற்பாடுகள், அமைப்புச் செயல்கள் நிறைகள், குறைகள் ஆகியவற்றை ஊன்றிக் கவனிப்பது உனக்கு நல்ல வெள்ளோட்டமாக அமையும்.

மாநாட்டில் நோட்டம் செலுத்துவதோடு இயன்ற அளவு பிறர்க்கு உதவியாக நடப்பதிலும் நாட்டங்கொள்க. மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பொறுப்புடன் அணுகுக. வாய்ப்பு தானுக ஏற்படின் பேச்சிலும் கலந்து கொள்க. வாய்ப்பேற்பட்டுப் பேசுவதாயின் இதுதான் உனக்கு முதல் மாநாட்டு பேச்சாயமையுமென்று கருதுகின்றேன். இதுபோது ஒரு தீர்மானத்தைப் பற்றிய பேச்சை நீ மேற்கொள்தல் நலம். அதிலும் அறிவிக்கும் தீர்மானச் செய்தி உனக்கு நன்ருகப் புரிந்ததா; தெளிவாக உன்னுல் விளக்கக் கூடியதா என்பனவற்றை ஆய்ந்து மேற்கொள்தல் வேண்டும். அதை விட முக்கிய

மான செய்தி ஒன்றுண்டு. தீர்மானங்கள் தானே மாநாட்டு கருத்தறிவிக்கும் நிகழ்ச்சிகள். பல்லாயிரவர் கூடி முடிவெடுக்கப்பட்ட ஒன்று பின்னர் நடை முறைக்குக் கொண்டுவர வேண்டியதல்லவா? ஆகையால் தீர்மானத்தைப் பற்றிப் பேசுவதென்பது வெறும் பேச்சோடு நின்று விடுவதல்ல. ஒரு பெரும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதாகும்.

எத்தீர்மானம் உன்னால் முன்மொழிந்தோ வழிமொழிந்தோ பேசப்படுகின்றதோ அத் தீர்மானத்தைப் பின்னர் செயற்படுத்தும் பணியில் நீயும் பொறுப்பேற்கிறாய் என்பது பொருள். உன்னோடு கூடி முன்மொழிந்தோ வழிமொழிந்தோ பேசியவரை இணைத்துக்கொண்டு அத் தீர்மானத்தைச் செயற்படுத்தப் பின்னர் முயல வேண்டும். ஆறு திங்களோ, ஓராண்டோ தீர்மானத்தின் தகுதிக் கேற்ப ஒரு வரையறை செய்து கொள்ள வேண்டும். அக்காலத்திற்குள் தீர்மானச் செய்திகளை யார் யாருக்கு அறிவிப்பது, என்னென்ன நடவடிக்கை எடுப்பது, என்று திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். முடிவை மாவட்டக் கழகத்திற்கும் தலைமைக் கழகத்திற்கும் அறிவித்து உன் பணியை நிறைவேற்ற வேண்டும்.

தீர்மானம் பற்றிய இம் முறையை நீ கூட்டும் மாநாட்டில் முக்கியமானதாகக் கொள்க. எத்தனை தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றனவோ அத்தனை தீர்மானங்கட்கும் குறித்த காலத்தில் செயல் விளக்கம் வரவேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானத்தை விளக்குவோர்க்கு அறிவித்தல் நலம். நடைமுறைக்குக் கொண்டு வருதல் முறை. உன் பொறுப்பிலும் முயற்சி

யிலும் கூட்டப்படும் உன் மாவட்ட மாநாட்டைக் காணக் காத்திருக்கிறேன் நான்.

முன் கடிதங்களிலும் இக் கடிதத்திலுமாக அமைப் புப் பணி, கொள்கை விளக்கப் பணி ஆகிய இரண்டின் குறிப்புகளை உன் நினைவில் வைத்தேன். மூன்ருவது பணியாகிய தலைமைக் கழகத்திற்கு உரமூட்டும் பணியை அடுத்து உள்ளத்துட் கொள்வது இன்றியமையாத தாகும்.

கிளைக் கழகங்களும், கொள்கை விளக்கங்களும் தலைமைக் கழகத்திற்கு உரமூட்டுவனதான். அவை களோடு மட்டும் தலைமைக் கழகம் வைரம் பாய்ந்து விடாது. மேலும் சில உதவிகளால் நாம் வைரத்தைப் பாய்ச்ச வேண்டும். சில உதவிகளில் முதல் உதவியாக நான் குறிக்க விரும்புவது 'நம் நாடு' நாளிதழை வளப் படுத்துவதைத்தான். ஒரு பேரியக்கமாகிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 'நம் நாடு' சீரிய இதழா யினும் சிறிய இதழ். அளவிலும் அமைப்பிலும் ஈடுகட்டக் கூடியதல்ல. நாம் முனைந்து உதவி அதனை அளவிலும் அமைப்பிலும் வளப்படுத்தியாக வேண்டும்.

நத்தைக் கூடுகள் நாலுகாதம் ஒளி வீசிப் பார்க் கின்றன. முத்தொளிகள் நாம் எத்தனை நாளைக்குச் சிப்பிக்குள்ளேயே சுருங்கிக் கிடப்பது? பத்திரிகை பலம் ஒன்றுமட்டும் பக்கத்துணையாகி விடுமாளுல் பார் தம்பி நம்மியக்கத்தின் மிளிர்வை; பூரித்துப் போவாய்.

உன் திருமணச் செலவு எல்லாம் சேர்த்து ரூ. 320 தான் என்ருல் சிலருக்கு வியப்பூட்டும். "பெரிய வணிகர், வருவாய்ப் பெருக்கமுள்ளவர்கள். ஆனுல் கஞ்சத்தனத்

தைப் பார்" என்று சிலர் கூறக் கேட்டேன். அவர்களது ஆரவார உள்ளம் அவ்வாறு பேசச் செய்கிறதென்பதையும் அறிவேனாகையால் வருந்தவில்லை. நானூறு ரூபாய் செலவிடுவதென்று திட்டமிட்டேன். உன்னைப் போலவே வேண்மாளும் பட்டுடையை விரும்பாது கைத்தறியை விரும்பியதாலும் பிறவற்றாலும் திட்டத்திலும் பாக்கி கட்டியுள்ளீர்கள். இத்தொகையை எந்த நல்ல காரியத்தில் ஈடுபடுத்துவதென்று கருதினேன். 'நம் நாடு' வளத்திற்கு இதனை அனுப்பிவிடலாமென்ற எண்ணம். உன் கருத்தையும் வேண்மாள் கருத்துடன் இணைத்தெழுதுக.

இப்படி நாம் ஒரு சிறு தொகை வழங்கி விடுவதால் நாம் விரும்பும் 'நம் நாடு' வளம் பெற்று விடாதென்பதை நீ அறிவாய். அதற்கும் ஒரு பணியை நீ தொடங்கியாக வேண்டும்; **"இயக்க நாளிதழை முழுச் செய்திதாளாக்கித் தருக! அதற்கு என் சிறு உதவியாக ரூபாய் பத்தை அனுப்பியுள்ளேன்"** என்ற குறிப்போடு பத்து ரூபாயைத் தலைமைக் கழகத்திற் கனுப்புக. இயக்க நண்பர்களில் இயல்பு வாய்ந்தவர்களை அவ்வாறு செய்யச் செய்க. ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் தமது நண்பர்களில் – உறவினர்களில் பத்துப் பத்துப் பேரை இவ்வுதவியைச் செய்யத் தூண்டினால் 'நம் நாடு' உள்ளங்கை நாடாகவா உன் கைக்கு வரும்? இயக்கத்தின் ஞாயிறாகவல்லவா அரசியல்வானில் திகழும். இது அவசியமான உதவி. உடனடியாகச் செய்ய வேண்டிய உதவி. தலைமைக் கழகத்தின் உரத்திற்கும் இயக்கத்தின் பெருக்கத்திற்கும் இது ஒரு பெருங்குறையாக உளது. உடன் தீர்த்தாக வேண்டும். நாமும் உதவ வேண்டும். தலைமைக் கழகமும் நமக்கு உதவ வேண்டும்.

எனது இவ்வெண்ணம் காற்று வாக்கில் நண்பர் கள் பலரது உள்ளத்தில் பட்டு அவர்களும் இவ்வுதவி செறிந்த தூண்டுதலைச் செய்ய முனைந்துளர். நீயும் முனைக!

அண்ணுவின் வாழ்த்தினைப் பெற இன்னும் பணி யுண்டா என்கிருயா? நிறைய உண்டு. நீ ஒருவனுக அவ்வளவும் செய்யக் கூடுமா என்ன? உன்னளவுக்கு இப்பணிகள் போதுமானவை. செய்வன திருந்தச் செய்யப் பட்டால்தான் கருதிய பலன் கிட்டும். நாம் அடிக்கடிக் கூறும் கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் கடமை யையும் மறந்து விடுதல் கூடாது. செய்ய மேற்கொள் ளும் வினையில் இவைகள் நழுவாதிருக்கும் வகையை வள்ளுவர்பால் அறிந்து கொள்தல் நல்லது.

வினை செய்ய இறங்குவோர்க்கு வள்ளுவர் மூன்று கருத்துரைகளை அறிவித்துள்ளார். உள்ளத் தூய்மை யோடு வினை செய்தல், உள்ள உறுதியோடு வினை செய் தல், முறையறிந்து வினை செய்தல் என்று பிரித்து அருமையான பாதையமைத்துள்ளார். வினைத் தூய்மை, வினைத் திட்பம், வினை செயல் வகை ஆகிய மூன்று அதிகாரங்களையும் திருக்குறளில் பயில்க. இவற்றைத் தான் நாம் கண்ணியம், கட்டுப்பாடு, கடமை என் கிருேம். அப்பாதையை நினைவிற் கொள்க.

நாட்டுப் பணிக்கு இவ்வளவு வரையறைகளை வற் புறுத்துவதற்குக் காரணமே நம் நாட்டுப் பிணிதான். தமிழர்க்குள் அமைந்த ஒற்றுமையின்மையும், 'கட்டின வீட்டிற்குப் பணிக்கி'யும் நம் நாட்டை நெடுங்காலமாகக் கவ்விக் கொண்டிருக்கும் பிணி.

சங்க காலம் வளமான காலந்தான். ஆனால் நாட்டுக்கு நலமான காலமல்ல. பண்டையச் சோழ, பாண்டிய, சேர நாடுகள் ஒன்று கூடிய தமிழகம் ஒரு வல்லரசாய் வாழ்ந்திருக்க வேண்டும்; ஆனால் வாழவில்லை. சோழன் சேரனோடு போரிட்டான்; சேரன் பாண்டியனை வென்றான்; பாண்டியன் சோழனைத் தீர்த்தான் என்ற செய்திகள் இலக்கியங்களாக விளங்கினவென்றால் தமிழக ஒற்றுமையைச் சிந்திக்கவா முடிகிறது. நாட்டுக்கு நாடு தான் இந்த நிலை என்றால் நலங்கிள்ளிக்கும் — நெடுங் கிள்ளிக்கும் கோட்டைக்குள்ளேயே குத்துவெட்டு. நலங் கிள்ளியும் நெடுங்கிள்ளியும் சோழர்களே. கோட்டைக் குள்ளே இரண்டு கட்சியோடு நின்றதாவென்றால் கோப் பெருஞ் சோழனுக்கும் அவன் மக்களுக்கும் வீட்டுக்குள் ளேயே கட்சி. ஒரு சோழ இனத்துக்குள்ளேயே ஒன்பது பேர் வல்லடி வழக்கு செய்த நிகழ்ச்சி உண்டு. இவை களிலேயே ஊறிப்போன நாட்டில்தான் பக்குவமறிந்து எளிதாகப் பிறர் வந்திறங்கினர். ஆதிக்கம் பெற்றனர்.

முடிமன்னர்கள் நிலையைக் கண்டு இளங்கோவடிகள் இத்தமிழகம் ஒன்றுகூடாதா என்று கனவு கண்டார். அண்ணனுக்காக இளவரசையும் துறந்த அவரால் என்ன செய்ய முடியும்? தன் காலத்திலே தமிழகத்தை இணைத் துப் பார்த்து மகிழ்ந்தார். சோழ நாட்டைப் புகார்க் காண்டத்திலும் சேர நாட்டை வஞ்சிக் காண்டத்திலும் அமைத்து கண்ணகியின் வரலாறு மூலம் இணைத்து ஒன்றுபட்ட தமிழகத்தைச் சிலப்பதிகாரத்தில்வது விளங்கச் செய்தார்.

இளங்கோவடிகள் கனவு நனவாகாமல் வந்திறங்கிய இனத்தவர்களும், பல்லவர்களும், பிற்காலச் சோழர்களும்

அவைகள் தேய்ந்து உருப்பெற்ற மிட்டா மிராசுகளும் முழு மூச்சாகக் காரியம் செய்தனர். இத்தனைக்கும் பிறகு அறிஞர் அண்ணா அவர்கள் இணைப்பு முயற்சியில் ஈடு பட்டுள்ளார். இளங்கோவடிகளுக்குப் பின் அண்ணாதான் இதை எண்ணியவர் என்பதை இலக்கியத்தையும், 20-ம் நூற்றாண்டின் தமிழக அரசியலையும் நடுநிலையிற் காணு வோர் அறிவர். அறியாதோரிற் சிலர்தான் 'அய்யோ அண்ணாதுரையா!' என்று அழுக்காறால் பொருமுகின்ற னர்; எரிச்சலால் ஏசுகின்றனர். ஆனாலும் அண்ணாவின் ஆள்காட்டிவிரலின் அசைவுக்கு ஆயிரமாயிரம் கட்டிளங் காளையரின் தோள்கள் விம்மித் தினவெடுத்துக் காத்து நிற்பதை எண்ணும் போதுதான் அவர்கட்கும் அச்சம் தலைதூக்குகின்றது; உண்மை நிலை புரிகிறது. அந்தப் பல்லாயிரவரில் நீ ஒருவனாக மிளிர முன்வந்துள்ளாய். நம் சமுதாயத்தின் ஆசான் அண்ணாவின் வாழ்த்தினைத் தகுதி வாய்ந்த பணிக்குப் பரிசாகப் பெற எண்ணுகிறாய். பெறுவாய் என்ற நம்பிக்கையில் "பெறுக" என உன்னை வாழ்த்துகின்றேன்.

அறிஞர் அண்ணாவின் வாழ்த்திற்கு என் வாழ்த்தைத் தரும் நான் உயிராகக் கொண்டுள்ள ஒரு கருத்தை உன் முன் வைக்கக் கருதுகின்றேன். நீ விரும்பிக் கேட்டிருந் தவைகளுக்கு விளக்கம் தந்த நான் நீ குறிக்காத மொழி யுணர்ச்சி பற்றிய கருத்தைக் குறிக்காமலிருக்க என்னால் இயலவில்லை.

தமிழ் சிறந்த செம்மை சான்ற மொழி; இலக்கண இலக்கியப் புதையல்கள் நிரம்பியது; இனியது; எளியது. மறுப்பாரில்லை. ஆனால் இன்றைய நிலை என்ன என்ப தல்லவா நோக்கத் தக்கது.

மேற்போக்காகப் பார்த்தால் தமிழகத்தில் தமிழுக்கு ஆக்கம் பெருகி வருவதாகப் படுகிறது. தமிழ் அரசாங்க ஆட்சி மொழியாகி விட்டது. பல்கலைக் கழக மொழியாகவும் ஆக்கப்பட இருக்கின்றது. அஞ்சல் துறையிலும் கூட சிலவற்றில் தமிழையும் இணைக்க எண்ணுகின்றனராம். நல்ல தமிழ் வழக்கு நிலவுகிறது. தமிழ் நூற்கள் மலிவுப் பதிப்பாக மலிந்து கிடக்கின்றன. இத்தனை நிலையிருக்கையில் உன் அண்ணன் இன்றைய நிலை பற்றிக் கவலை தெரிவிக்கக் காரணமென்னவென்று கருதுகின்றாயல்லவா? மேலே காட்டியவைகளை ஆராய்ந்தால் என் கவலைக்குக் காரணம் விளங்கும்.

தமிழ் ஆட்சி மொழியாகியுள்ளது உண்மைதான். அதனால் தமிழினுக்கு உயர்ச்சியா அயர்ச்சியா என்றால் ஆட்சி மொழியானால் உயர்ச்சிதான் அமைய வேண்டும் என்பேன். ஆனால் இன்றைய ஆட்சியாளரால் உயர்ச்சியில்லை. அயர்ச்சிதான் நேரப் போகின்றது. அரசாங்கப் பணிகட்கென சொற்களை உருவாக்கும் பொறுப்பு அவர்களிடம் உள்ளது. எக்காரியமும் எவ்வாறேனும் முடிந்தால் சரி என்றபோக்கில் காரியமாற்றி வரும் நம்மரசினர் அப்பொறுப்பைத் தமிழுணர்ச்சி யற்றவர்கள்பால் ஏற்றியுளர். ஒரு நாடு தன் தாய்மொழியை ஆட்சிமொழியாக்கி விடுவது எளிது; கடமையுமாகும். உண்மையாகவே அம்மொழிச் சொற்களை உருவாக்கி நடைமுறைக்குக் கொண்டு வருவதுதான் அரிது. சுருக்கமாகச் சொன்னால் தமிழ்ச் சொற்களோடு ஆங்கிலம், வடமொழி, இந்தி முதலிய சொற்கள் யாவும் தமிழ் எழுத்தில் அதிலும் சில வடவெழுத்துக்களோடுதான் ஆட்சி மொழியாகப்

போகிறது. தமிழில் உள்ள சொற்களை ஆய்ந்து தற்காலத்திற்கேற்ற கலைச்சொற்களைக் காணும் நோக்கம் அரசினரிடமில்லை. புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்கும் எண்ணமுமில்லை. அதற்குரிய தமிழறிஞர்களை நாடி அவர்தம் கருத்துரையைப் பெறும் எண்ணமுமில்லை. இதனால் சட்டப்படி வழக்கிற்கு வரும் சொற்களில் பல் வகைக் கலப்புச் சொற்கள் நிலவும். தமிழ்ச் சொல் வழக்கு குறையும். வழங்கும் சில தமிழ்ச் சொற்களும் மறக்கப்படும். பழைய இலக்கியங்களை இன்று படிக்க வேண்டுமாயின் ஆசிரியர் துணை தேவைப்படுவது போல இன்றைய இலக்கியங்கட்கும் நம் பரம்பரைகட்கு வழி காட்டி தேவைப்படும். இவ்வாறு பழஞ் சொற்கள் மறைவதால் நம் வரலாற்றுப் பெருமையும் தனிப் பண் பான நாகரிகமும் குறையும்.

பல்கலைக் கழகங்களில் போதனை மொழியாகத் தமிழ் அமைவது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் பல்கலைக் கழக ஆசிரியர்கள், நூலாசிரியர்கள் ஆகியோர்க்கு அம் மொழியை உள்ளன்போடு கையாளும் அளவு மொழி யுணர்ச்சி உண்டா என்பது ஐயத்திற்குரியதே. இது போன்றே ஒவ்வொன்றுக்கும் குறை தவழும் முறைகளி லேயே நிகழ்கின்றன.

நாட்டுக்கொரு பொது மொழி என்ற திட்டத்தில் இந்தி திணிக்கப்படுவதை யாவரும் கண்கூடாகக் கண்டு வருகின்றோம். தமிழ் நம் நாட்டிற்கு ஆட்சி மொழியா யினும் ஒரே இந்தியா கொள்கையினர் இந்தியைச் சில துறைகளில் பொது மொழியாக ஆக்க முனைந்துள்ளனர்.

அது எவ்வகைக் கேட்டைத் தமிழர்க்குத் தரும் என்ப தற்கு ஒரு அறிஞர் தரும் கருத்தைக் கீழே தருகிறேன்:—

"பாரதத்தை ஒரு சம்பூரண சம்பன்ன பிரபுத்வ லோகதந்தராத்மக கணராஜ்யமாக அமைத்து அதன் நாகரிகதர்கள் அனைவர்க்கும் சமாஜிக, ஆர்த்திக நீதியை வழங்க..........."

"ஏதாவது புரிந்ததா? மீண்டும் படித்துப் பாருங் கள்! புரிந்துவிட்டதா? மக்களாட்சியில் மக்கள் மொழியில், சாதாரண மக்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்கு இது எழுதப்பட்டது. படி யாத சாதாரண தமிழ் மக்களும் இதைச் சொன்னல் உடனே புரிய வேண்டும் என்பதற்காகத் தொகுக்கப் பட்டது! என்ன ஐயா, இது தமிழா என்று கோபம் என்மேல் கொள்ள வேண்டாம்! தமிழ் எழுத்துக் கள் - அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்!!"

"சம்பூரண சம்பன்ன பிரபுத்வலோக தந்தராத் மக கணராஜ்யம்" என்ற தடபுடலான சொற் ருெடர், Sovereign democratic Republic என்ற ஆங்கிலச் சொற்ருெடரின் ஹிந்தி மொழி பெயர்ப்பு. 'பூரண உரிமையுள்ள மக்கள் குடியரசு' என்று எளிய தமிழில், யார்க்கும் புரியும் வண்ணம் சொல்லி விடலாம்! ஆனல் அது ஹிந்திப் பொது மொழியாகாதே!"

"இன்னெரு உதாரணம்:—"

"மதுரை நிர்வாசன க்ஷேத்திரத்தில் மே 10-ம் நாள் நிர்வாசனம் நடைபெறும். மத்தாதாக்கள் வந்து சாலகா பண்ண வேண்டும்."

"புரிகிறதா? ஆங்குள்ள சொற்களின் பொருளைக் குறிப்பிடுகிறேன்; நிர்வாசன க்ஷேத்திரம் என்றால் தேர்தல்; மத்தாதாக்கள் - வாக்காளர்கள், சாலசா - வாக்களிப்பு !"

"மதுரைத் தொகுதியில் 10-ம் தேதி தேர்தல். வாக்காளர்கள் வாக்குக் கொடுக்க வேண்டும்." என்பதைப் பொது மொழியாம் ஹிந்தியில் தமிழ் எழுத்தில் இவ்வாறு அன்போடு புகன்றுள்ளார்கள் !"

"லோகதந்தராத்மக கணராஜ்யம், நிர்வாசனம், மத்தாதாக்கள் போன்ற சொற்கள் தமிழகத்தில் நிலைபெற இடமுண்டா? அவசியமா? முடியுமா? காரிய சாத்தியமா? நல்லதுதானா? ஒற்றுமை வளர்க்கும் கற்றறிந்தோர்களே! சிந்திக்க வேண்டுகிறேன்."

"ஹிந்தி பொது மொழி ஆக்கப்படுவதில் இத்தகைய தொல்லைகள் ஏற்படும். மலையாளம், ஆந்திரம், கன்னடம் போன்ற மாநிலங்களில் எப்படி இந்த லோகதந்தராத்மக கணராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்களோ, நமக்குத் தெரியவில்லை."

இவ்வாறு கூறுபவர் யாரென்று கேட்கிறாய்? இந்திய அரசினர்க்கு மொழியாக்கம் பற்றி ஆலோசனை கூறும் குழுவின் தமிழ் மொழிப் பகுதிக்காக அமைந்த ஒரு உறுப்பினர். தங்கள் பேச்சுகள் எடுபடாததைக் கூறி அழுதுவிட்டு இப்படி ஒரு 'குரல்' வைத்திருக்கிறார். ஆட்சியினரின் மொழித் திணிப்பால் தமிழ்ச் சொற்கள் எவ்வாறு வழக்கற்றுப் போகும் என்பதற்குத் தற்காலத்தவர் தரும் சான்று இது.

இந்த மொழிப் பிணி தீர அறிஞர் அண்ணா கூறும் மாமருந்து திராவிடம் திராவிடர்க்காவது. என்பதுதான் திராவிடம் நமக்கானால் மொழிப் பிரச்சினைக்கே இடமில்லைதான். தமிழ் ஆட்சி மொழியாகவும், ஆங்கிலப் உலகத் தொடர்பு மொழியாகவும் அமையும். ஆனாலும் இடைக் காலத்தை நீடிக்க விடுவோமானால் சில மாற்ற முடியாத நிலைகளை இந்திய அரசினர் உண்டாக்கிவிடவும் கூடும். ஆகையால் மொழியுணர்ச்சியையும் கொண் நோக்கிடில் திராவிடப் பிரிவினை முயற்சி விரைவில் நிக வேண்டு மென்பதை அறிவாய். தூங்கிச் செய்ய வேண் யதை அயர்ந்து செய்ய வேண்டும். இது தூங்காமல் - அயராமல் செய்ய வேண்டிய பணி. நாட்டுப் பிண நீக்கும் பணி. முனைந்து செய்க. விரைவில் அறிஞ அண்ணாவின் வாழ்த்தினைப் பெறுக. திராவிட நா டாட்சியில் அறிஞர் அண்ணாவைப் பிடித்திழுத்து அப வைத்து வாழ்த்தினைப் பெறுக.

**" நல்ல பணி செய்தவன், தொடர்ந்து பணி செ தவன், வெற்றிக்கான பணி செய்தவன். கருத்தொ பணி செய்தவன். அவன் பெயர் வெளிமான் — அவனு குத் துணை நின்றவர் வேண்மாள். வாழ்க வெளிமான் வேண்மாள் ! "** என்ற அறிஞர் அண்ணாவின் வாழ்த் உங்கட்குக் கிட்டுவதாக. வாழ்க; வாழ்க!

வணக்கம்.

உங்கள் நல்வாழ்வை விரும்பு

**" சேரமான் "**